டாக்டர்கள் பற்றி ஏற்கனவே சொன்னேன். ஒன்று சொல்லவில்லை, விட்டுப் போய்விட்டது. டாக்டர்கள் ஏன் போடப்படவில்லை என்று சொல்கிறபோது அதற்கு காலதாமதம் ஆகிறது என்றால் மருத்துவத் துறை இயக்குநரே ஒரு வருடமாக இல்லையாமே, ஏன் என்று தெரியவில்லை, இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி நிர்வாகத்திலே இருக்கிற குறைபாடுகளைப் போக்கவில்லை என்றால் எத்தனை நல்ல காரியங்களை செய்தாலும் கூட பயன் தராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்திலே குறைபாடுகள் இருக்கின்றன. ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. அதனாலே சில சங்கடங்கள், போராட்டங்கள் வரும். ஆனால் அந்தப் போராட்டங்களை அவர்கள் எந்த நிலையில் செய்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு இருக்கிற சங்கடங்களைப் போக்குகின்ற முறையிலே உங்களுடைய அணுகு முறை இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதோடு நிர்வாகம் நல்லமுறையிலே செம்மையாக செயல்பட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தஅவையில் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையை ஒரு நாற்பது ஆண்டுக்கால வரலாற்றை உற்று நோக்கினால் வருவாய்த்துறையிலே எந்த அளவுக்கு நாம் வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்பதை அறிந்துகொள்கின்ற வகையிலே இது அமைந்துள்ளது. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகத்தினுடைய சில பகுதிகள், கேரளத்தின் சில பகுதிகள் இணைந்து இருந்து, இணைந்த மாநிலமாக சென்னை மாகாணம் இருந்தபொழுது 1938–39 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையிலே வருவாய் 16.13 கோடியாகவும், செலவு 16.10 கோடியாகவும் இருந்து 3 இலட்சம் ரூபாய் உபரி பட்ஜெட் என்று காட்டப்பட்டு 38 ஆம் ஆண்டு நிதி நிலை வரலாற்றையும் இன்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு அது வளர்ந்திருக்கிற வரலாற்றையும் நாம் ஒருமுறை திரும்பிப் பார்ப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். பின்னர், 1966–67 ஆம் ஆண்டில் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்து அவர்களுடைய ஆட்சி முற்றுப்பெற்ற நேரத்தில் 1966–67 ஆம் ஆண்டினுடைய வருவாய் 194.55 கோடியாகவும், செலவு 201.43 கோடியாகவும் இருந்து பற்றாக்குறை 6.78 கோடி ரூபாய் என்று வருவாய்க் கணக்கில் காட்டப்பட்டது.

1967-68 இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வரான நேரத்தில், வருவாய் 233.39 கோடி ரூபாயாகவும், செலவு 233.33 கோடி ரூபாயாகவும் இருந்து, 6 இலட்சம் ரூபாய் உபரி என்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் ஏற்பட்ட வருவாய் வளர்ச்சியின் காரணமாக நான் ஒவ்வொரு ஆண்டையும் பற்றி இங்கே எடுத்துக் கூற விரும்பவில்லை. 1975-76-இல் கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பு 75-76 ஆம் ஆண்டு வருவாய் 563.36 கோடி ரூபாயாகவும், செலவு 557.9 கோடி ரூபாயாகவும் இருந்து, உபரி நிதிநிலை அறிக்கை என்ற அளவில் 5.44 கோடி ரூபாய் உபரியாக அறிவிக்கப்பட்டது. 78-79 இல் இன்றுள்ள ஆட்சியில் வருவாய் 680.08 கோடி ரூபாயாகவும், செலவு 726.76 கோடி ரூபாயாகவும் இருந்து, துண்டு விழுந்த தொகை வருவாய்த் துறையிலே 46.68 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு 79-80-இல் நம்முடைய நிதியமைச்சர் இங்கே வைத்துள்ள இந்த அறிக்கையின்படி வருவாய் 849.83 கோடி ரூபாயாகவும் பெருகியிருக்கிறது. கடந்த ஆண்டு வருவாய் 680.08 கோடி ரூபாயாகத்தான் இருந்தது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இந்த ஆண்டு திடீரென்று இந்த 680 கோடி ரூபாய் வருவாய் 849 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்ததற்குக் காரணம் என்னவென்பதை எனக்கு முன்னால் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மாரிமுத்து அவர்களும், மற்றும் நண்பர் அழகர்சாமி அவர்களும் எடுத்துக் காட்டினார்கள். கடந்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து பிரித்துக் கொடுக்கப்படும் வரிகளிலிருந்து மாநில அரசுக்கு, நம்முடைய தமிழக அரசுக்குக் கிடைத்தது 145.75 கோடி ரூபாய்தான் கடந்த ஆண்டு. ஆனால் இந்த ஆண்டு ஏழாவது நிதி ஆணைக்குழு செய்த பரிவுரையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதன் விளைவாக நமக்குக் கிடைகின்ற வரிப்பங்கீடு 264.80 கோடி ரூபாய் என்ற அளவிற்கு மாறி இருக்கிறது. எனவே, சென்ற ஆண்டைவிட 119.05 கோடி ரூபாய் இந்த ஆண்டு ஏழாவது நிதி ஆணைக்குழு பரிந்துரையின் காரணமாக, அதனை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதன் காரணமாகப் பல்வேறு மாநிலங்களுக்கும், அந்தந்த மாநிலங்களில் வசூலிக்கப்படுகின்ற மத்திய அரசாங்கத்தினுடைய வரித் தொகைகளைப் பிரித்துக் கொடுப்பதிலே காட்டப்பட்ட சலுகைகளின் காரணமாக இந்த ஆண்டு 119 கோடி ரூபாய் நமக்கு அந்த வரிப் பங்கீட்டின் மூலம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது.

வருவாய் இந்த அளவிற்குப் பல முனைகளிலே அதிகரித்து இருந்தாலும் கூட, கிராம மக்களுக்கு இந்த ஆட்சி பாடுபடுகிறது என்கின்ற பிரகடனம் அடிக்கடி செய்யப்பட்டாலும்கூட இந்த அளவிற்கு வருவாய் உயர்ந்திருக்கின்ற ஒரு சூழலில் எனக்கு முன் இங்கே பேசிய அழகர்சாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, மாரிமுத்து அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல அதற்கான, கிராம மக்களுடைய வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கான, வசதி வாய்ப்புகளுக்கான திட்டங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை.

நான் ஒரு ஒப்புவமையை இங்கே காட்ட விரும்புகிறேன். 1975-76 ஆம் ஆண்டு கழக ஆட்சி நடைபெற்றபொழுது 563 கோடி ரூபாய் வருவாய் இருந்த பொழுது, சிறிய பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 4.19 கோடி ரூபாய். ஆனால் இந்த ஆண்டு அதாவது 849 கோடி ரூபாயாக வருவாய் உயர்ந்திருக்கின்ற நேரத்தில், சிறிய பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கி உள்ள தொகை 3.46 கோடி ரூபாய்தான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11·40]

இப்படி ஒரு கோடி ரூபாய் அளவுக்கு மேல் சிறிய பாசன திட்டங்களுக்குக் குறைத்திருப்பது ''கிராம மக்களை நாங்கள் என்றென்றும் இதயத்திலே வைத்து அவர்களுக்காகவே பாடுபடுவதாக உறுதி எடுத்து ஆட்சி செய்கிறோம்'' என்று கூறுகின்ற இந்த அமைச்சரவைக்கு பொருத்தமாகாது என்று இங்கே நான் சுட்டிக்காட்டுவேன்.

பாசனம், நீர்வழி, வடிகால், வெள்ளக் கட்டுப்பாடு போன்ற மிக முக்கியமான திட்டங்கள், இவைகளுக்காக 1975–76 கழக ஆட்சியில் அதாவது, ரூ. 563 கோடி வருவாயிருந்தபொழுது, ரூ. 19.09 கோடி செலவிடப்பட்டது. ஆனால், இன்று ரூ. 849 வருவாய் என்று அறிவிக்கப்படுகிற இந்த ஆண்டில், இந்தத் தலைப்பில் ரூ. 18.70 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் எதிர்க்கட்சி என்கின்ற முறையில் நாங்கள் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சாலை, நீர்வழிப் போக்குவரத்து என்கின்ற தலைப்பில் 1975–76 ஆம் ஆண்டில் ரூ. 6.81 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு ரூ. 2.83 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாலைகளுடைய பராமரிப்பும், புதிய இணைப்புச் சாலைகளை உருவாக்குவதும் கிராமப்புற மக்களுக்கு எவ்வளவு தேவை என்பதை அடிக்கடி வலியுறுத்தியும் அதை உணர்ந்து முன்பிருந்த கழக அரசு செயலாற்றியதைப் பலமுறை சுட்டிக்காட்டியும்கூட ரூ. 6.80 கோடியாக, 1975—76-ல் இருந்த அந்த ஒதுக்கீடு, இந்த ஆண்டு சாலைகளுக்கும் நீர்வழிப் போக்குவரத்துக்கும் ரூ. 2.83 கோடியாகக் குறைக்கப்பட்டது வருந்தத்தக்கது. நாம் இன்று பயணம் செய்கிற நேரத்தில் பல ஊர் சாலைகள் பல்லாங்குழி போல் இருக்கிற காட்சிகளைக் காணுகிறோம். அவைகளுடைய பராமரிப்புகள் நடைபெறவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள் சீர்படுத்தப்படவில்லை. அவைகளில் பயணம் செய்கிற ஒவ்வொருவரும் நேரடியாகக் காணமுடிகிறது. அன்றாடம் அல்லலுறுகிற கிராம மக்கள் இந்த அவதியை உணர முடிகிறது.

1979 மார்ச் 22] [திரு. மு. கருணாநிதி]

வீட்டு வசதி என்ற தலைப்பைப் பார்த்தால்கூட, 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 6.02 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால்' மிக அதிக வருவாய் வருகிற, ஏறத்தாழ ரூ. 850 கோடி வருவாய் வருகிற இந்த ஆண்டில் வீட்டு வசதிக்காக ரூ. 3.86 கோடிதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள் முதலானவர்கள் என்ற தலைப்பில், கழக ஆட்சியில், ரூ. 563 கோடி வருவாய் இருந்த காலத்தில், அதாவது, 1975-76-ல் ரூ. 19.38 கோடிதான் அவர்களுடைய நலனுக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால், ரூ. 849 கோடி வருவாய் வருகிற இந்த நேரத்தில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் நலன்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 18.46 கோடிதான் என்பதை வருத்தத்துடன் நான் இங்கே கண்டிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். கழக ஆட்சியிலே நான் ஏற்கனவே சொன்ன ஏறத்தாழ ரூ. 19 கோடி, பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டது மாத்திரமல்ல. எனக்கு முன் இங்கே பேசிய மற்ற கட்சிகளுடைய தலைவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல், ஏறத்தாழ ரூ. 13 கோடி அளவுக்கு, தாழ்ந்தப்பட்ட மக்களுக்காக இலவசமாகவே வீடுகள் கொடுக்கப்பட்ட திட்டமும் அந்த ரூ. 19 கோடியிலே சேராமல், தனித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டது என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்டுவது மிகமிக அவசியம்.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கான நலன்—இதிலே, 1975-76-ல் ரூ. 563 கோடியாக வருவாயிருந்தபொழுது, ரூ. 5.71 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 7.04 கோடி ஒதுக்கப்பட்டது. இதை மிகவும் அதிகம் என்று கருதமுடியாது. ரூ. 1.35 இலட்சம் அதிகம் ஒதுக்கப்பட்டது.

ஆனால் 563 கோடி ரூபாயில் 5.71 கோடி ரூபாய் பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட அந்த விகிதாசாரத்தையும், இப்பொழுது 849 கோடி ரூபாயில் 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட விகிதாசாரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் கழக ஆட்சியில் 1.02 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிறது 0.82 சதவிகிதம்தான் என்பதை நான் நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பாக, இந்தக் குரலை இந்த மன்றத்திலே நான் எழுப்பியாக வேண்டும், அதை கவனிக்க வேண்டும் என்ற அவசியத்தை எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊனமுற்றோர் மறுவாழ்விற்காக 6.10 லட்சம் ஒதுக்கப்பட்டது, இந்த அரசால் கடந்த ஆண்டு. அது கடந்த ஆண்டில். இந்த ஆண்டு என்ன ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் எதுவுமே ஒதுக்கப்படவில்லை என்ற சோகமான சூழ்நிலையைத்தான் இந்த புத்தகம் ஏற்படுத்துகிறது.

பார்வையற்றோர் மறு வாழ்வுக்கு என்று சொன்னால், சென்ற ஆண்டு 1.36 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இதிலே 41 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முட்டுக்காட்டில ஊனமுற்றோர்களுக்கு நவீன பயிற்சிக்கும் பயிற்சி பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் 16.80 லட்சம் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு அதற்காக எதுவும் ஒதுக்கப்படவில்லை. எனவே, சமுதாய நல திட்டங்களுக்காக கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட இப்படிப்பட்ட முக்கியமான திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏன் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே நான் எடுத்துக் காட்டிய குறைபாடுகளை நிதியமைச்சர் அவர்கள் கவனித்து களைய முன் வரவேண்டும்— அவர்களுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கமும் தர வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

1978–79-ல் 609.08 கோடியாக இருந்த வருவாய் 849·83 கோடியாக ஆனபிறகு, அதாவது 169.75 கோடி ரூபாய் அதிகமாக இருந்தும் கூட நான் குறிப்பிட்ட முக்கிய திட்டங்களுக்கு தொகையை ஒதுக்காததோடு, மேற்கொண்டும் மக்களை பாதிக்கக்கூடிய அளவிலே அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர்களாக உள்ள அனைவரும் எடுத்துக் காட்டியதைப் போல, ஏழை எளிய மக்களை பாதிக்கக்கூடிய அளவிற்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் அளவிற்கு இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் வரிவிதிப்பு செய்திருக்கிறது. இதிலே தேங்காய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. நான் நினைத்துப் பார்க்கிறேன், தேங்காய் மீது இருந்த வரியை, திராவிட கழக ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட நேரத்தில், அண்ணா அவர்கள் இறந்து நான் அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில் இன்றைய தினம் முதல் அமைச்சர் ஆக உள்ள திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அன்றைய தினம் கழக உறுப்பினராக இந்த மன்றத்திலே இருந்த நேரத்தில், தேங்காய் வியாபாரிகளுக்கு, அந்த வியாபாரிகளின் சங்க தலைவர் மாணிக்கம் என்பவர் தற்போதைய முதலமைச்சருக்கு நெருங்கிய நண்பர். அவர்களின் சார்பாக அவர்களின் சங்க சார்பாக எங்களிடத்திலே அடிக்கடி வந்து முறையீடுகள் தருவார். இன்றையதினம் முதலமைச்சர் ஆக உள்ளவர், தேங்காய்மீது வரி போடுவது கொடுமையல்லவா? ஏழை எளிய மக்களை பாதிக்காதா என்று கேட்டார். அவருடைய பரிந்துரைகளை கேட்டு அன்றைக்கு தேங்காய் மீது போடப்பட்டிருந்த வரியை விலக்கப்பட்டது என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். அந்தப் பழைய நிகழ்ச்சியை நினைவு கொண்டாவது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த தேங்காய் மீதிருக்கும் வரியை நிச்சயமாக நீக்கி விடுவார்கள் என்று நம்புகிறேன்.

ஏனென்றால், இன்றைக்கு முதல் மந்திரியாக உள்ளவர் அன்றைக்கு சட்ட மன்ற உறுப்பினர் ஆக இருந்தபோது அவருடைய பரிந்துரைகளை எடுத்துக்கொண்டோம். இன்றைக்கு ஆளும் கட்சியில் உள்ளவர்கள் இதைப் பற்றி வெளிப்படையாக சொல்லாவிட்டாலும் தனியாகவாவது சொல்லியிருப்பார்கள். இன்னும் மற்ற எதிர்கட்சித் தலைவர்களும் சொன்னார்கள். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இப்பரிந்துரைகளை எடுத்துக்கொண்டு, ஏழை எளிய மக்களை பாதிக்கக்கூடிய வரி இது என்று கருத்தில் கொண்டு உடனடியாக நீக்கி, இன்றைக்கே இந்த அறிவிப்பை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

[முற்பகல் 11-50]

அதைப்போலவே கையால் செய்யப்படுகிற தீப்பெட்டிகள் மீது வரி போட்டு இருக்கிறீர்கள். அதிலே ஒன்று, சிறு தொழில் அதிபர்கள் ஆண்டு ஒன்றுக்கு 25,000 ரூ. மேற்படாமல் உற்பத்தி செய்பவர்களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இது ஒரு ஏமாற்று வித்தையே தவிர நடைமுறையில் செயல்படாத ஒன்றாகும். இந்த சிறிய தொழில் அதிபர்களுக்கு 25,000 ரூபாய்க்கு குறைவான விற்பனை இல்லை. எனவே, அந்தத் தொழிலதிபர்கள் பாதிக்கப்படுவதன் மூலம் கையினால் தீப்பெட்டி செய்யும் பல தொழிலாளர்கள் நீங்கள் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று இன்று அறிவித்துக்கொண்டிருக்கிற இனிய ஆனால் ஏட்டுச் சித்திரங்களாக இருக்கும், அறிவிப்புகளுக்கு இடையே புதிய வேலை இழந்தவர்களை நீங்கள் உருவாக்குகிறீர்கள் என்பதுதான் இதற்குப் பொருளாகும். எனவே, அந்த வரியை உங்களுடைய பதிலுரையில் விலக்கிவிட்டேன் என்று அறிவிக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் வலியுறுத்தக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே பலரையும் கவரக்கூடிய அனைவரும் எதிர்பார்த்து இருக்கக்கூடிய ஒரு அற்புதமான, புரட்சிகரமான என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பாராட்டிப் பேசிய ஒரு கவர்ச்சிகரமான அறிவிப்பு— அதைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாரிமுத்து அவர்கள் இதை எப்படிச் செய்யப்போகிறீர்கள் என்று கேட்டு, அதற்கு மேல் அதிலே அவருக்கு எந்த விவரமும் தெரியவில்லை என்பதை விளக்கி நீங்களே சொல்லுங்கள் என்ற அளவிற்கு அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டார். அது தான் உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம். இந்த உரையில் குறிப்பிட்டு இருக்கும் வாசகத்தை அப்படியே படித்தால்“ . . . . . படித்த, படிக்காத, வேலையில்லாத

அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு, ''உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்'' செயலாக்கப் படும். இத்திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வேலைவாய்ப் பின்றி இருக்கும். 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களை பதிவு செய்து சொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்சொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் (காண்டிராக்டர்) இல்லாமல்; அரசுத் துறை களின் நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப் படும். இத்திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்களின் ஊதியம், அன்றாடம் நிறைவேற்றப்பட்ட பணியின் அளவை அடிப்படையாகக்கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். இதன்படி நாளொன்றுக்கு சுமார் ரூபாய் மூன்றும், அரிசியும், கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொரு வருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும்.

இது நிதி அமைச்சரின் அறிக்கையில் காணப்படுகிற ஒரு புரட்சிகரமான அறிவிப்பு. பத்திரிகைகள் எல்லாம் கொட்டை எழுத்தில் இந்தச் செய்திகளை வெளியிட்டுள்ளன தமிழ் நாட்டில் எல்லோருக்கும் வேலை தரப்படும், வேலை இல்லாதவர்களுக்கெல்லாம் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் சம்பளம், அதோடு உணவு தானியங்கள், இந்தச் செய்தியை நம்பி பத்திரி கைக்காரர்களும் அந்தச் செய்தியை பெரிதாக வெளியிட்டு இருக்கி றார்கள். ஒரு கணக்கைப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஊராட்சி ஒன்றியங்கள் 374. மார்க்சிஸ்ட் கட்சி தலைவர் சங்கரய்யா அவர்கள் பேசுகிறபோது சொன்னார், அந்த வேலை வாய்ப்புக்கு பதிவு செய்து கொள்கிறவர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாவட்ட அளவில் வந்து பதிவு செய்து கொள்வது என்றால் இயலாது. அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அவரும் இது நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறார் என்று கருதுகிறேன். ஊராட்சி ஒன்றிய அளவில் பதிவு செய்யப்படுகிறது என்று வைத்துக்கொண்டால் கூட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய பரப்பளவிற்குள்ளே 5,000 பேராவது வேலை இல்லாதவர்கள் இருப்பார்கள். நீங்கள் கொஞ்சம் அதிகமாகச் சொல்கிறீர்கள், நான் அந்த 5,000-ல் 2,500 பேருக்கு வேலை கொடுத்து விடுவோம் என்று நிதி அமைச்சர் வாக்களித்தால் 2,500 ஆக குறைத்துக்கொள் கிறேன். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 2,500 என்று கணக் கிட்டால் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் எவ்வளவு பேர் வேலை இல்லாதவர்கள் இருப்பார்கள் என்ற கணக் கையும் பார்த்தால், ஏறத்தாழ 10 லட்சம்—நான் குறைவாக

1979 மார்ச் 22] [திரு. மு. கருணாநிதி]

சொல்கிற கணக்கில் 10 லட்சம் பேர்—வேலை இல்லாத சூழ் நிலையில் இருப்பார்கள். 5,000 பேரில் 2,500 பேருக்கு வேலை கொடுத்தாலும், 2,500 பேர் வேலை இல்லாமல் இருப்பார்கள். 2,500 பேருக்குக் கொடுக்கப்போகிறீர்களா என்பது வேறு விவகாரம். நான் கேட்கிறேன். 2,500 பேருக்கு வேலை இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு 1 ரூபாய் தரப் போகிறோம் என்று சொல்கிறீர்களே, அப்படிப் பார்த்தால் 10 லட்சம் பேருக்கு ஒரு நாளைக்கு 1 ரூபாய் என்றால் மொத்த மாக மாதத்திற்கு எவ்வளவு ஆகும்? கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் ஆகும். ஆண்டு ஒன்றுக்கு 36 கோடி ரூபாய் தேவைப் படும். நானும் நீங்கள் தந்து இருக்கிற நிதி நிலை அறிக்கை யின் பக்கங்களிலே எல்லாம் ஒன்று விடாமல், பக்கம் பக்கமாக புரட்டிப்பார்த்தேன். அதிலே எங்கே 36 கோடி ரூபாய் இதற் காக ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பதை அந்தப் புள்ளி விவரங் களில் இருந்து என்னால் காண முடியவில்லை. எனவே, எந்தத் தலைப்பின் கீழும் இப்படி இந்த வேலைவாய்ப்புக்கு எவ்வளவு ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்ற தொகையை நீங்கள் குறிப்பிடவில்லை.

ஒரு வேளை நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடும். நாங்கள் கிராமப்புறங்களில் நிறைவேற்றுகின்ற திட்டங்களில் எல்லாம் இவர்களை ஈடுபடுத்தி, அவர்களுக்கு இந்தச் சம்பளம் தரப்படும் என்ற பதிலை சொல்ல முடியும். அப்படிச் சொல்வார்களானால் நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கின்ற 1975—76-ல் இருந்த கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களை விட, அதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தைவிட பாதிக்கும் குறைவாக, சில பகுதிகளில் முக்கால்வாசிக்கும் குறைவாக பணம் ஒதுக்கப் பட்டிருக்கும்போது ஏற்கெனவே அந்த பகுதிகளில் வேலை செய்கிறவர்கள் அன்னியில் நீங்கள் புதிதாக எப்படி அவர்களுக்கு வேலை தரப் போகிறீர்கள் என்பது புரியவில்லை. அதனால் நிதியமைச்சர் மிகுந்த ஜாக்கிரதையாக இந்த அறிவிப்பின் கடைசி யில் ஒரு அழகான வாசகத்தைச் சேர்த்து, பிறகு எங்களை எல்லாம் ஏமாற்றிவிடலாம் என்ற நினைப்பில் செய்திருக்கிறார்கள் அந்த வாசகம் இதுதான். ''இந்தப் புதிய திட்டத்திற்கென நிர்வாக அலுவலர்களுக்கு தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது''.

குதிரை வாங்கப் போகிறோம். அதற்கு இப்போது சவுக்கு வாங்கி விட்டோம். குதிரை வாங்கியவுடன் சவுக்கு பயன்படும் என்று சொல்வதைப் போல இது இருக்கிறது. இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்றெல்லாம் அறிவிக்காமல், தரப்பட்டி ருக்கிற பெரிய புத்தகங்களில் அதைப்பற்றிய குறிப்புகளைப் போடாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற நிர்வாக அலுவலர் களுக்கு தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, இந் பயிற்சி அளிக்கிற திட்டம்

நிறைவேறிய பிறகுதான் இந்தத் திட்டம் வரப் போகிறது என்பதை நிதியமைச்சர் அவர்கள் மிகுந்த திறமையோடு ஜாக்கிரதையாக அந்த வாசகத்தின் மூலமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

எங்களுக்கு இருக்கிற அச்சமெல்லாம் சென்னையிலே அமுல் படுத்தப்பட்ட காய்கறித் திட்டம், அது மனைதோறும் வரும், யாரும் மார்க்கெட்டுக்குச் செல்லத் தேவையில்லை, வீடு தேடி வரும், மூன்று சக்கிர வண்டியில் வரும், 150 வட்டங்களுக்கும் வரும், அந்த மூன்று சக்கிர வண்டிகள் அதிகம் தேவைப் படுவதால் அதற்கான தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் ; அப்படி ஏற்படுத்துகின்ற தொழிற்சாலையில் இளைஞர்கள் வேலைக்கு வருவார்கள் ; வேலைக்கு வருகின்றவர்களுக்கு தொழில் செய்கின்ற உபகரணங்கள் செய்ய வேண்டும் ; அந்த உபகரணங்களைச் செய்யும் தொழில்கள் கிராமப்புறங்களில் வரும் ; ஆகவே, கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னார்களே ; கடைசியில் அமுல்படுத்த முடியாமல் காய்கறித் திட்டம் மனை தேடி மண்ணுக்குள் போய் விட்டதே அதைப்போல இந்தத் திட்டம் போய்விடக்கூடாது என்பதே எங்கள் கவலை. வேலை வாய்ப்புத் தருவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி எங்களுக்கு. ஆனால் காய்கறித் திட்டம்போல் ஆகிவிடக்கூடாது.

16,000 நியாய விலைக் கடைகள் கிராமங்களில் திறக்கப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. இப்போது 13,000 கடைகள் திறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. நான் சென்ற முறை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் பேசும்போது கூட பல விவரங்களைச் சுட்டிக் காட்டினேன். தனியார் கடைகளில் விற்கப்படும் பொருட்களுக்கும் நியாயவிலைக் கடைகள் என்ற பெயரால் உள்ள கடைகளில் விற்கப்படும் பொருட்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள விலை வித்தியாசம் இருக்கிறது. தனியார் கடைகளில் குறைந்த விலையும், நியாயவிலைக் கடைகளில் அநியாய விலையும் இருப்பதற்கு பல எடுத்துக்காட்டுக்களை இங்கே இந்த மன்றத்தின் முன்னால் வைத்தேன். இப்போது புதிதாக ஒரு விவரத்தை இந்த நியாயவிலைக் கடைகள்பற்றி சொல்ல விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம், காரிபட்டி கிராமம் அங்கே ஒரு நியாய விலைக்கடை. அவர்கள் 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் நாளில் 383·85 காசுக்கு நியாய விலைக் கடைக்கு பொருட்களை கொள்முதல் செய்கிறார்கள். 18-ந்தேதி கொள் முதல் செய்து, 20-ந்தேதி அன்று வியாபாரத்தைத் தொடங்கு கிறார்கள். முதல் நாள் விற்பனை 4ரூபாய் 17காசு. 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் தேதிய விற்பனை 82 ரூபாய் அல்ல; 82 பைசா. ஒவ்வொரு நாளும் நடைபெற்ற விற்பனைப் பட்டியல் என்னிடம் இருக்கிறது. ஆனால் நேரம் குறைவாக இருக்கிறது.

அந்த காரிபட்டி நியாயவிலைக் கடையில் முதல் ஒரு மாதம் விற்பனையான தொகை 42 ரூபாய் 19 காசு என்பதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இந்த விற்பனையில் லாபம் சுமார் 10 சதவீதம் என்று வைத்துக் கொண்டால் கூட மொத்த லாபம் 4 ரூபாய்தான் அந்த நியாயவிலைக் கடைக்கு ஒருமாதத்தில் கிடைக்கும்.

(நண்பகல் 12-00)

இன்னும் சில இடங்கள். அதாவது சேலம் மாவட்டத்தில் கருமாபுரம் என்ற இடத்தில் ஒரு கடை இருக்கின்றது. அந்தக் கடையிலே மாத விற்பனை 248 ரூபாய் 18 காசாக இருக்கிறது. வடாற்காடு மாவட்டம் வாலாஜா தாலூகாவில் அம்மணந்தாங்கல் என்ற இடத்தில் உள்ள கடையில் மாத விற்பனை 154 ரூபாய் 34 காசுகள். சென்னசமுத்திரம் என்ற இடத்தில் உள்ள கடையில் மொத்த விற்பனை 290 ரூபாய் 55 காசாக இருக்கின்றது. அதிகமான தொகையாக இருக்கின்ற இந்த 290 ரூபாயை எடுத்துக் கொண்டால் கூட 10 சதவீதம் லாபம் என்று வைத்துப் பார்த்தால் 29 ரூபாய் அல்லது 30 ரூபாய்தான் அந்தக் கடைக்கு மாதத்தில் லாபமாக கிடைக்கும். ஆனால் கடையிலே வியாபாரம் செய்வதற்கு போட்டிருக்கின்ற ஆளுக்கு தர வேண்டிய சம்பளம் மாதம் 100 ரூபாய். அந்த அளவிலே தந்து கொண்டிருக்கிறீர்கள். எத்தனை நாளைக்கு நியாயவிலைக் கடைகளை நடத்தப் போகிறீர்கள். ஒரு ஆளுக்கு 100 ரூபாய் வீதம் 13 ஆயிரம் கடைகளுக்கு ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி ரூபாய் என்ற அளவுக்கு அந்தக் கடைகளிலே வேலை செய்கின்றவர்களுக்கு சம்பளமாகத் தர வேண்டி இருக்கும். அது மட்டுமல்ல, கொள்முதல் செய்வதற்குச் செல்கிற நேரத்திலே போக்குவரத்து செலவுக்கும் பணம் செலவழிக்க வேண்டும். கடைகள் இருக்கின்ற இடங்களுக்கு வாடகையும் கொடுக்க வேண்டும். இதெல்லாம் உங்களால் இயலுமா? இதைத்தான் அன்றைக்கு நீங்கள், நியாயவிலைக் கடைகளை திறக்கப் போகிறோம் என்று அறிவித்த நேரத்திலே சட்டமன்றத்தில் இது நடக்கக்கூடிய காரியமா—நடக்க வேண்டாம் என்று சொல்லவில்லை—நடக்கக்கூடிய காரியமா என்றும் நன்றாக யோசித்தீர்களா என்றும் கேட்டபோது முதலமைச்சரவர்கள் அதிகாரிகளை எல்லாம் கலந்து கொண்டுதான் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வீம்புக்காக சொல்லி விட்டோம் என்ற ஒரே காரணத்திற்காக, செய்யப்படுகிற காரியமே தவிர வேறல்ல.

நீங்கள் வைத்திருக்கிற நியாய விலைக் கடைகள் இருக்கட்டும். இன்றைக்கு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நியாய விலை கிடைக்காமல், அதாவது கட்டுப்படியாகிற விலை கிடைக்காமல் துயரப்படுகிறார்கள். அவர்களுடைய

துயரைத் துடைப்பதற்கு இந்த அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? விவசாயிகள் ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 120 வேண்டுமென்று கேட்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நேற்றைய தினம் திரு. சங்கரைய்யா அவர்கள் பேசும்போது ''ஒரு குவிண்டாலுக்கு ரூ. 120 அல்ல. ரூபாய் 100 ஆவது கொடுங்கள்'' என்று குறிப்பிட்டார். நானும் அதையே தான் கேட்கிறேன். அதாவது மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் ரூ. 85ஆவது ஒரு குவிண்டாலுக்கு அந்த விவசாயிகளுக்கு கொடுக்க முன்வருகிறதா? இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் ஒரு குவிண்டால் 70 ரூபாய்க்குத்தான் உற்பத்தி செய்த விவசாயி காளால் விற்க முடிகிறது. அந்த விலைக்குக்கூட நெல்லை வாங்கு வதற்கு ஆள் இல்லாமல் திண்டாடுகிறார்கள். அதிலும் குறிப் பாக ராஜராஜன் என்று பெயரிடப்பட்ட நெல்லை வாங்கு வதற்கே ஆள் இல்லை என்கிற ஒரு சூழ்நிலை இன்றைக்கு தஞ்சைத் தரணியிலே ஏற்பட்டிருக்கிறது. முன்னேற்றக் கழகத் தினுடைய ஆட்சி இருந்தபோது விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கிற பண்டங்களுக்கு குறிப்பாக மிக அத்தியாவசிய பொருளா கிய நெல்லுக்கு நியாயமான கட்டுப்படியான விலை கிடைக்குமா என்று சந்தேகப்பட்டபோதெல்லாம், அவர்கள் அந்த உற்பத்தியைத் தொடங்குவதற்கு முன்பே கழக அரசின் சார்பாக நானோ உணவு அமைச்சரோ அந்த விவசாயிகளைக் கூட்டி வைத்து அவர்களுக்கு உறுதிமொழிகளைத் தந்தோம். நீங்கள் கவலைப்படாமல் உங்க ளுடைய கழனிகளில் உற்பத்திகளைத் தொடங்குங்கள், நாங்கள் விலை குறையாமல் பார்த்துக் கொள்கிறோம், கட்டுப்படியான விலை தருகிறோம், அப்படித் தர முடியாத சூழ்நிலை வருமே யானால் சப்போர்டிங் ப்ரைஸ் அரசாங்கத்திலிருந்து தர நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற அளவில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே கழக ஆட்சிக் காலத்திலே உணவு உற்பத்தியிலே விவசாயிகள் மிகுந்த நம்பிக்கை யோடு அவர்களுடைய வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டார்கள். ஆனால் இன்றைக்கு மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற ஒரு குவிண்டாலுக்கு 85 ரூபாய் என்ற அளவில் கூட கொள்முதல் செய்ய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தயாராக இல்லை. என்ன காரணம்? பணம் இல்லையா? வேறு என்ன கரணம்? குவிண்டாலுக்கு ரூபாய் 85 நிர்ணயம் செய்தால் தான் பணம் கொடுக்கப்படும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்தால், அந்தப் பணத்தையாவது வாங்கி, 'எந்த விலைக்காவது எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற அனாதை களின் நிலையிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடிமக்களுக்கு இருக்கின்ற துயரைப் துடைப்பதற்கு நீங்கள் ஏன் அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, அரசு அலுவலர்களைப்பற்றி இங்கு பேசப்பட்டது அரசு அலுவலர்களுக்கு இந்த அரசு நன்மை செய்கிறதோ இல்லையோ, எப்படி தொழிற்சங்கங்களை உடைப்பது என்பதில்

1979 மார்ச் 22] [திரு. மு. கருணாநிதி]

மும்முரமாக இருக்கிறதோ அதே வேகத்தை அரசு அலுவலாளர் சங்கத்திலும், என்.ஜி.ஓ. யூனியனிலும் காட்டி, போட்டி சங்கத்தை உருவாக்கி அதற்கு அங்கீகாரம் அளிப்பதில் அரசுக்கு இருக்கிற அக்கறை மூன்றாவது ஊதிய குழுவின் பரிந்துரைகளில் ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைவதற்கு ஒரு கமிஷன் அமைப்பதற்கு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. அதன் காரணமாக என்.ஜி.ஓ. சங்கத்தினர் இன்று முதல் உண்ணாவிரதம் போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏன் இவ்வளவு காலமாக — மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும், அதிலுள்ள முரண்பாடுகளைக் களைவதற்கு ஏன் ஒரு குழு நியமிக்கப்படவில்லை என்பதை நான் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் தான் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எந்த இடத்திலும் ஊழலைப்பற்றி சொல்லவில்லை. நிதிநிலை அறிக்கையில் ஊழல் என்ற அந்த வார்த்தை இல்லை. அந்த வாசகம் இல்லை. ஊழல் என்ற வார்த்தை குறிப்பிடாத காரணத்தினாலேயே அது இந்த இரண்டாண்டு காலத்தின் ஆட்சியில் அறவே களையப்பட்டு விட்டது என்று அர்த்தமல்ல. அதைச் சொல்வதற்கு நாங்கள் தகுதி படைத்தவர்கள் அல்ல என்று அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தால் தான் நிதிநிலை அறிக்கையில் அதுபற்றி விமர்சனம் செய்யப்படவில்லை என்று கருதுகிறேன். நான் ஆறு, ஏழு உதாரணங்களை முறைகேடுகளை, ஊழல்களை எல்லாம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசும்போது, இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்தேன். அதற்கான பதில்கள் எதுவும் அந்தத் தீர்மானத்திற்கு விடையளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நீண்ட நேர பேச்சில் எதற்கும் பதில் அளிக்கவில்லை என்பதை இந்த அவையும் அறியும், இந்த நாடும் நன்கு அறியும். மீண்டும் நான் அந்தக் குற்றச்சாட்டுகளை சொல்ல விரும்பவில்லை. புதிய குற்றச்சாட்டுகள், அந்தக் குற்றச்சாட்டுகள், மிகச் சிறிய அளவிலிருந்து ஆரம்பித்து, பெரிய அளவு வரை, எப்படி நடைபெற்றிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு அச்சகத்தில் ஒரு பெண் — இந்த ஆண்டு ஜனவரி 8-ம், தேதி தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படுவதாக ஆணை பிறப்பிக்கப்படுகின்றது. ஆணை எண். 3428 டி.இ. 12/79, தேதி 1979-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 8-ம் நாள். இப்படி அவர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படுவதை 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8-ந் தேதி அன்று. இதில் வேடிக்கையும் வேதனையும் என்ன வென்றால் வேலை நீக்கம் செய்யப்பட்ட மறுநாளே அதாவது 9 ம் தேதியே அந்தப் பெண் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதாக ஒரு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது. அந்த உத்தரவு என்னிடத்தில் இருக்கிறது அதில்,

C. P. No. 3428/TE/12/79, dated 9-1-1979.

Office of the Works Manager,
Government Central Press,
MADRAS.

## PROCEEDINGS

*Sub* : ESTABLISHMENT—Government Central Press, Madras-Time and Gate Section—Thirumathi Jayalakshmi—Suspension from service—Orders revoked.

REFERENCE—Proceedings of the Works Manager, Government Central Press, Madras No. C. P. 3428/TE/12/79, dated 8—1—79.

Pending charges to be levelled against Tmt. V. Jayalakshmi, Junior Time Keeper, Government Central Press, Madras, orders passed in the Proceedings cited suspending her from service is revoked with immediate effect என்று இருக்கிறது, அதில் இந்த முறைகேட்டுக்கு என்ன காரணம். இடையில் என்ன நடைபெற்றது 8-ம் தேதி பதவியிலிருந்த தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுகின்ற பெண்மணி, மறு நாளே, 9-ம் தேதி மீண்டும் அந்த வேலை நீக்கம் ரத்து செய்யப் பட்டு பதவியில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் என்றால் இந்த ஒரு நாள்கூத்து ஏன் நடைபெற்றது. இந்த ஆட்சியில் இப்படி நடப்பது அதிசயம் ஒன்றுமல்ல. ஏற்கனவே சின்னாளப் பட்டியில் — மதுரை மாவட்டம் — சின்னாளப்பட்டியில் ஒரு டாக்டரை உத்தமபுத்திரனை — உத்தமபுத்திரன் என்ற டாக் டரை — இந்த உத்தமபுத்திரன் ஆட்சியில் உள்ள மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களே....

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ அரசு அச்சகத்தில் முதல் நாள் ஒரு பெண்மணி சஸ்பெண்ட் செய்யப்பட்டு மறு நாளே வேலைக்கு அமர்த்திய இந்த ஒருநாள் கூத்து எப்படி நடந்தது என்று கேட்டிருக்கிறார்கள். எப்படி நடந்தது என் றால், அந்த பெண்மணி வேலைக்குப் போயிருக்கிறாள், அப் போது அங்கிருந்த வொர்க்ஸ் மானேஜர் வேலைக்கு வரக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். ஏன் என்று கேட்டு இருக் கிறாள் வேலைக்கு வரக்கூடாது என்றால் வரக்கூடாது தான் என்று சொல்லி உடனே ஒரு சஸ்பெண்ட் ஆர்டர் எழுதி கொடுத் திருக்கிறார்.

1979 மார்ச் 22] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

[பிற்பகல் 12.10]

மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்கள் நிரம்ப அனுபவம் பெற்றவர். அந்த நிர்வாகத்தின் பொறுப்பிலே இருப்பது நெறியாளர்தான். அதாவது டைரக்டர். அந்த அம்மையார் ஏதாவது தவறு செய்திருப்பார்களானால், அந்த ஒர்க்ஸ் மானேஜர் நெறியாளருக்கு எழுதி, விளக்கம் பெற்று, நெறியாளர் தான் அந்த ஆணையைப் பிறப்பித்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, அந்த ஒர்க்ஸ் மானேஜரே நெறியாளரின் அதிகாரத்தை எடுத்து, அந்த ஆணையைப் பிறப்பித்திருக்கிறார். நெறியாளரின் கவனத்திற்கு வந்த பிறகு, விவரங்களுக்கு விளக்கம் கேட்டபோது, அதற்கு தகுந்த விளக்கம் அளிக்கவில்லை. ஆகவே, அந்த அம்மையார் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார். இதுதான் நடந்திருக்கிறது. எனவே, நிர்வாக சீர்கேடு இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படியானால் ஏன் அந்த ஒர்க்ஸ் மானேஜர்மீது நடவடிக்கை எடுத்திருக்கக் கூடாது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நெறியாளரிடம் இந்த அரசாங்கம் விளக்கம் கேட்டிருக்கிறது. வந்த பிறகு, கண்டிப்பாக நடவடிக்கை எடுகப்படும்.

திரு. மு. கருணாநிதி : இந்தப் பிரச்னை எழுப்பப்பட்ட காரணத்தினால், இந்த உண்மையை ஊர் அறியவும், அதை அறிந்த பிறகு இந்த ஒர்க்ஸ் மானேஜர் மீது நடவடிக்கை எடுக்க நாங்கள் நெறியாளரிடம் விளக்கம் கேட்டிருக்கிறோம் என்று இங்கே அமைச்சர் அவர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சரி அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். சின்னாளப்பட்டியிலே நடந்ததைப்பற்றி நான் சொன்னேனே, அதற்கு வருவோம். சின்னாளப்பட்டியிலே உத்தமபுத்திரன் என்ற டாக்டர் மருந்துகளை எடுத்துச் சென்றபோது, கையும் களவுமாக பிடிபட்டிருக்கிறார்; சாதாரண ஒர்க்ஸ் மானேஜர் அல்ல. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே பிடிபட்டார். அதே இடத்திலே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். அப்படி செய்யப்பட்டவர், விசாரணை எதுவுமில்லாமல், 10 நாட்களுக்குள் அவர் மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டதற்கு என்ன காரணம்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ற முறை எதிர் கட்சித் தலைவர் அவர்கள் இதைபற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, நான் இந்த மருத்துவ மனை நிர்வாகத்திலே இருக்கின்ற டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அவர்களைக் கேட்டபோது, அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, 10 நாட்களுக்குள் அல்ல, இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவர் வேலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர் தன் தவறை ஒப்புக்கொண்டு, அதாவது அந்த மருந்தை முன் அனுமதி பெறாமல் பள்ளி மாணவர்களுக்காக நடைபெற்ற விழாவுக்கு எடுத்துச் சென்றது தவறு என்று ஒப்புக்கொண்டு, பிறகு வேலையில் மீண்டும் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்பதை டீ.டீ.பி.எச். தெரிவித்திருக்கிறார்.

திரு. மு. கருணாநிதி: அதை நான் மறுக்கிறேன். இடையிலே பணம் புரண்டிருக்கிறது என்பது என் குற்றச்சாட்டு. முதலமைச்சர் அவர்கள் விசாரணை வைப்பார்களானால், தகுந்த சாட்சியங்களோடு நான் இதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். மருந்தோடு கையும், களவுமாக அவர் பிடிபட்டாரே, அப்போதே அமைச்சர் அவர்களிடம் இந்த விளக்கத்தை அளித்திருக்கக் கூடாதா பள்ளியிலே மாணவர்களுக்காக எடுத்துச் செல்கிறேன். ஆகவே, திருடிச் செல்லவில்லை என்ற விளக்கம் அளித்திருக்கக்கூடாதா இந்த விளக்கத்தை ஏன் அமைச்சர் அவர்களிடம் அவர் சொல்லியிருக்கக்கூடாது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சென்ற காலத்தில் இந்த விளக்கம் தரப்படவில்லை. சின்னாளப்பட்டியில் நடைபெற்ற ஒரு பள்ளியின் விழாவிற்கு எடுத்துச் சென்றதாக, அந்தப் பள்ளி நிர்வாகிகளோடு, டீ.டீ.பி.எச். விசாரணை செய்து, ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறார். அந்த குறிப்புகள் இருக்கின்றன. தேவையானால் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: அப்படியானால் இவ்வளவு அவசரப்பட்டு ஏன் ஒரு அமைச்சர் அவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும். கையும், களவுமாக பிடிபட்ட அந்த டாக்டரிடம் ஏன் அப்போதே விவரங்கள் கேட்டிருக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, கையும், களவுமாக பிடிபட்ட அந்த டாக்டரிடம் விவரம் கேட்டேன். அந்த டாக்டர் சரியான விளக்கம் தர முடியவில்லை. பார்மசிஸ்டு இடத்திலும் கேட்டேன். அவராலும் விளக்கம் தர முடியவில்லை. ஆகவே, மருத்துவ மனையிலே

இருக்க வேண்டிய மருந்தை, வெளியே கொண்டுவந்த காரணத்தினால், அவர் பையிலே இருந்த காரணத்தினால், இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : சரியான விவரத்தை அந்த மருத்துவர் தர முடியவில்லை. என்ன காரணம்? அப்போது விவரத்தை தர முடியாதவர் பிறகு ஏன் தந்தார்? அப்படியானால் அமைச்சர் அவசரப்பட்டிருக்கிறார், அமைச்சரையாவது தண்டிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. திருச்சி அர். சௌந்திரராசன் : விவரம் தந்தார் தரவில்லை என்று செல்லவில்லை. அவர் சொன்ன விவரம் சரியான விவரம் என்பதற்கு விசாரணை செய்ய உடனடியாக வழிவகை இல்லை. பிறகு விசாரணைக்குப் பிறகு தெரிய வந்தது.

திரு. மு. கருணாநிதி : 25,000 ரூபாய் வரை பணம் புரண்டு மீண்டும் அவர் அந்த வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். முதலமைச்சர் அவர்கள் ஒரு விசாரணை வைத்தார்களானால் முதலமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கையானவர்களைக் கொண்டு விவரங்களைத்தரத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, ஆளும் கட்சிக்காரர்கள் சில ஆக்கிரமிப்புகளிலே ஈடுபட்டு அரசுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் கூட கையகப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பது பற்றிய விவரங்களைக் கடந்த ஆண்டு இந்தச் சட்டமன்றத்தில் உறையாற்றிய போது சைதாப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் இங்கு சொன்னார்கள். அப்போது இன்றைய நம்முடைய மின்வாரியத் துறை அமைச்சர் அப்போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் அதற்கான விவரங்களை கொடுக்கும்படி புருஷோத்தமன் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கான விவரங்களை புருஷோத்தமன் கொடுத்து அதுபற்றிய குறிப்புகள் சட்டசபை நடவடிக்கை குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது.

சைதாப்பேட்டையில் அரசினர் பயிற்சிக் கல்லூரிக்கு எதிரில் ஜோன்ஸ் சாலையும் அண்ணா சாலையும் சந்திக்கும் இடத்தில் ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்திருப்பது பற்றியும் அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது பற்றியும், அண்ணா மருத்துவ மனை என்ற பெயர் பலகை அங்கே போடப்பட்டிருப்பது பற்றியும்

5—1—1978-ல் இந்தச் சபையில் பேசினார். அதற்கான புகைப் படங்களும் இங்கு காட்டப்பட்டது. அந்தப் புகைப்படங்களை மீண்டும் நமமுடைய நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் அன்றைக்கு விளக்கம் கூறிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் காட்ட விரும்புகிறேன். (புகைப்படத்தைக் காட்டியவாறு) இதுதான் புகைப்படம். அண்ணா மருத்துவ மனை, மூலிகை தயாரிக்கும் இடம் என்று ஒரு கொட்டகையைப் போட்டிருக்கிறார்கள். அது அரசாங்க நிலம். ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அந்த இடத்தை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அண்ணா நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு, அது மாத்திரமல்ல. அதற்கு அதிகாரி அனுமதியும் வழங்கியிருக்கிறார். இந்தச் சாலையை அகலப் படுத்துகிற வரையில் நீங்கள் இந்த இடத்தில் இருக்கலாம், என்று அதிகாரி அனுமதி வழங்கியிருக்கிறார். இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு முறைகேடானது அல்லவா, ஆளும் கட்சிக்காரர்களுக்குச் செய்யப்பட்ட சலுகை அல்லவா என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று ஒரு படத்தைக் காட்டியிருக்கிறார்கள். ஆக்கிரமித்திருக்கலாம். ஆனால் அவர் ஆளும் கட்சிக்காரர் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்படிக் குறிப்பிடுகிறார்கள். என்ன ஆதாரத்தில் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. இன்னொரு தகவலையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர், இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளைச் சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற புகாரைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : ஆகையால் இந்த அரசாங்கத்தில் ஆமை வேகத்திற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. ஆளும் கட்சி உறுப்பினர்கள் இப்படிப்பட்ட புகார்களைச் செய்த பிறகும், 5-1-78ல் கிளப்பப்பட்ட இந்தப் பிரச்சினைக்கு இது வரை முடிவு காணாமல் இன்னும் ஆக்கிரமிப்பாளர் பால கிருஷ்ணன் அவர் ஆளும் கட்சி இல்லையென்று சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன். யாராக இருந்தாலும் ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அரசாங்க இடத்தில் இப்படி ஒரு கொட்டகையைப் போட்டுக்கொண்டு அண்ணா மருத்துவமனை மூலிகைப் பண்ணை என்ற பெயரை வைத்துக் கொண்டு நடத்துகிறார். மாண்புமிகு அமைச்சர் நண்பர் வீரப்பன் அவர்கள் இன்றைக்கே கூட-நெடுந்தூரத்தில் இல்லை. அண்ணா சாலைக்கு காரில் சென்று பார்த்தால் அந்த இடத்தைக் காணலாம். அதற்குப் பிறகாவது ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுப்பார்களானால் மெத்தவும் மகிழ்ச்சியடைவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 22] [திரு. மு. கருணாநிதி]

இந்த ஆகிரமிப்பு மாத்திரமல்ல-நடைபாதைக் கடைகள் என்ற பெயரால் நம்முடைய உயர்நீதி மன்றத்தைச் சுற்றி கடைகள் கட்டப்படுகின்றன. அந்தக் கடைகளை கட்டுகிறவர்கள் ஆளும் கட்சிக் காரர்கள் என்பதை அங்கு சென்று விசாரித்தால் நன்றாகத் தெரிந்து கொள்ள முடியும். நூற்றுக்கணக்கான கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. நீதி மன்றத்தைச் சுற்றி தாற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டு அந்த கடைகளில் வியாபாரம் செய்கிற சாதாரண வியாபாரிகளிடத்தில் வசூல் செய்யப்பட்டு மாதம் ஒன்றுக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாயை ஒரு சில ஆளும் கட்சிக்காரர்கள் பங்கு போட்டுக் கொள்கின்றனர். என்ற குற்றச்சாட்டை நான் இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-20)

அங்கு சாதாரண வியாபாரிகள் பிழைப்பு நடத்த வேண்டாமா அவர்களுடைய பிழைப்பைக் கெடுக்கலாமா என்று அரசு என்னைத் திரும்பக் கேட்குமானால் நான் அரசுக்குச் சொல்வேன், அந்தக் கடைகள் இருக்கலாம் என்று கருதுவார்களானால் அந்தச் சின்னஞ்சிறு கடைகள் அரசு சார்பிலே கட்டப்பெற்ற அதற்குரிய வாடகையை அரசோ அல்லது மாநகராட்சியோ பெறுகிற அந்த வழி வகைகளைச் செய்யலாமே ஏன் செய்யவில்லை? அந்தக் கடைகளின் படங்களும் இருக்கின்றன, இந்தப் படங்களைக் காட்டினால் கூட ஆளும் கட்சியினர் இல்லை என்று சொல்லக் கூடும். (சில படங்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காட்டினார்கள்) நீதிமன்றத்தைச் சுற்றி கட்டப்பட்டுள்ள கடைகளின் படங்கள் தான் இவைகள், ஒரு படத்தில், உயர்நிதி மன்ற முன்புற அண்ணா சிறுகடைவியாபாரிகள் முன்னேற்றச் சங்கம் என்று அண்ணா படமும் மூதலைமச்சருடைய படமும் போடைப்பட்ட ஒரு பெரிய பலகையும் வைக்கப்பட்டு, அந்தச் சிறு கடை வியாபாரிகளுடைய சங்கம் அந்தப் பணத்தைப் வசூலித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கருத்தில் என்னுடைய அருமை நண்பர் அமைச்சர் வீரப்பனார் மாறுபடமாட்டார் என்று கருதுகிறேன். ஏனென்றால் அவருக்கே சென்னையில் உள்ள ஆளுங்கட்சியிலே உள்ள தோழர்கள் இந்தப் புகாரைக் கொடுத்திருக்கக்கூடும். எனவே இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் சென்னை மாநகரத்திலே பல இடங்களிலே செய்யப்படுகின்றன என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேனே தவிர வேறு அல்ல.

இன்னொன்று, முறைகேடுகள், எப்படி எப்படி நடக்கின்றன என்பதற்கு மற்றொரு சாட்சியம். 30—7—1978 அன்று அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இணைப்புக் காவியக் கலை மன்னர் எம்.ஜீ. ஆர். பொது நல மன்றம், சூரியநாராயணச் செட்டித் தெரு, சென்னை-81 என்ற ஒரு லெட்டர் பேடிலே

கே. தனபால் என்பவர் முதலமைச்சருடைய ஸ்பெஷல் ஆபீஸருக்கு (சீப் மினிஸ்டர்ஸ்செல்)ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறார். அதற்கு ஸ்பெஷல் ஆபிஸர், சீப் மினிஸ்டர்ஸ் செல் அந்தக் கடிதத்தின் மீது

''Forwa ded to the Chairman, Tamil Nadu Slum Clearance Board, Madras, for necessary action.,,

Special Officer,
Chief Minister's Cell,
Fort St. George, Madras-9.

என்ற முத்திரையோடு அந்தக் கடிதம் நெசசரி ஆக்ஷன் எடுப்பதற்காக சிலம் கிளயரன்ஸ் தலைவருக்கு அனுப்பப் படுகிறது. அந்தக் கடிதத்தினுடைய வேண்டுகோள் என்ன தெரியுமா? மழையின் காரணத்தால் தற்காலிகமாக ஹவுசிங் போர்டு வீடுகளிலே 2,000 பேர்கள் குடியேற்றப் பட்டிருக்கிறார்கள். அந்த இரண்டாயிரம் குடும்பங்கள் கீழே இறக்கப்படும் என்று 30-7-78அன்று பத்திரிகையில் குடிசை மாற்றுவாரியத் தலைவர் விட்டிருந்த அறிக்கையைப் பார்த்த பூண்டி தங்கம்மாள் தெருவில் உள்ள மீனவர் குடியிருப்பு காலனியில் மழையின் காரணமாக குடியேறிய ஊர் மக்கள் மிகவும் பீதியடைந்து இதைப்பற்றியே பெரும்பாலும் பரவலாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்குரிய இடம் அது அல்ல என்றாலும் கூட தயவு செய்து அவர்களை இப்போது அந்த வீடுகளிலிருந்து கீழே இறக்க வேண்டாம் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு மாத்திரமல்ல, கடைசியாக எழுதுகிறார்கள், அடுத்து வருகிற சென்னை மாநகராட்சித் தேர்தல் காலத்திற்குள்ளாக அவர்களை இறக்கிவிடாத அளவிற்கு, தாங்கள் கருணை வைத்து. சென்னை மாநகராட்சி தேர்தலுக்குப்பின் இறக்க அனுமதி தந்து, சட்டப்படி என்ன செய்யப்போகிறீர்களோ. அப்படி செய்யுங்கள் என்பதனைக் கோரி தாழ்மையுடன் ஐயாவின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன், அன்பன் கே. தனபால்; இந்தக் கடிதம் ''நெசசறி ஆக்ஷனு''க்காக அனுப்பபடுகிறது. சென்னை மாநகராட்சித் தேர்தலில் அந்த மக்களின் வோட்டுக்களைப் பெற்ற பிறகு தேர்தல் முடிந்த பிறகு அவர்களை அனுப்பலாம் என்ற முறையிலே ஆளுங்கட்சியினைச் சேர்ந்த செயலாளர் ஒருவர் ஒரு வேண்டுகோளை விடுகிறபோது அதனை 'பார் நெசசரி ஆக்ஷன், என்று அனுப்பப்படுகிறது என்பதைப் பற்றி நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கடிதம் இங்கே அவையிலே நம்முடைய அமைச்சருக்குப் பாராளுமன்றச் செயலாளராக இருக்கிறவரைப் பற்றிய கடிதம். மணச்சநல்லூர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மன்றம், திருச்சி மாவட்டம், அதனுடைய செயலாளர் இ. சுப்பிரமணியம் என்பவர் 1979-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 8-ம்

நாளில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளரும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான திரு. சௌந்திரராஜனுக்கு ஒரு கடிதம் எழுதினார். முசிறி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் முசிறிப்புத்தன் மணச்சநல்லூர் அரிசி ஆலைக்காரர்களிடம் 'மக்கள் திலகம்' என்ற நாளேட்டை கழகத்திற்காகத் துவக்கப் போவதாகச் சொல்லி நிதி திரட்டுகிறார்.

அதைப்பற்றி மனுவில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

இப்படிக்கு,
இ. சுப்பிரமணியன்.''

அவர் இணைத்து அனுப்பி இருக்கும் மனுவில் என்ன இருக்கிறது என்றால் -

''பொதுச் செயலாளர் அவர்களுக்கு,

வணக்கம். நமது அனைத்துலக எம். ஜி. ஆர் மன்ற தலைவரும், எங்கள் முசிறி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மாண்புமிகு முசிறிப் புத்தன் அவர்கள் தலைமைக் கழகச் சார்பில் ''மக்கள் திலகம்'' என்ற பெயரில் தினசரி செய்திப் பத்திரிகை ஆரம்பிக்கப் போவதாகவும், அதற்காக இங்குள்ள அரிசி ஆலை அதிபர்களிடமும், அரிசி வியாபாரிகளிடமும், நிதி வசூல் செய்கிறார். தொகை ரூ. 1,000 முதல் ரூ. 5,000 வசூல் செய்வதற்கு திட்டமிட்டு அதற்கு வசூல் செய்வதற்கு கீழ் கண்டவர்களை முசிறிப்புத்தன் நியமனம் செய்துள்ளார்.

1. பி. எஸ். தனக்கோடி செட்டியார், அசோகா ரைஸ்மில்.

2. பி. என். ஆறுமுகம், தண்டபாணி ரைஸ் மில்.

3. எஸ். ஆறுமுகம் செட்டியார், ஜெகதாம்பிகா ரைஸ் மில்.

4. கே. ஆர். வைத்திலிங்கம் பிள்ளை, பாலசுப்பிரமணியம் ரைஸ் மில்.

5. டி. பி. கே. நடேசன் செட்டியார், ஜெயலஷ்மி ரைஸ் மில்.

மேலே சொன்னவர்கள் வசூல் செய்கிறார்கள். இது உண்மையா? என்று அறிய விரும்புகிறோம். காரணம் இதுவரையில் தலைமைக் கழகத்திடமிருந்தோ அல்லது தங்கள் மூலமாகவோ இதைப்பற்றி செய்தி வரவில்லை.

1. தலைமைக் கழகம் ''மக்கள் திலகம்'' என்ற பெயரில் தினசரி பத்திரிகை ஆரம்பிக்கிறதா? 2. ''மக்கள் திலகம்'' என்ற பெயரில் பத்திரிகை ஆரம்பிக்க இருப்பதை பொதுச் செயலாளராகிய தாங்கள் ஏன் அறிக்கை வெளியிடவில்லை?

[திரு. மு. கருணாநிதி] [1979 மார்ச் 22]

உடனடியாக தாங்கள் '' மக்கள் திலகம் '' என்ற பத்திரிகையைப்பற்றியஉண்மையை அறிக்கையாக வெளியிட்டு மக்கள் மத்தியிலும்—கழகத்தினர்களுக்கும் விளக்கம் கொடுக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

இ. சுப்பிரமணியம்,
செயலாளர்,

எம்.ஜி.ஆர். மன்றம்,
மணச்சநல்லூர். ''

இப்படி ஒரு கடிதம் வந்ததா இல்லையா என்று தெரியவில்லை. அவர் ஏதோ சொல்வதறகாக எழ முயற்சிக்கிறார் என்று நினைக்கிறேன். சொல்ல வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, இப்படி ஒரு கடிதம் எனக்கு வந்ததாக ஞாபகம் இல்லை.

திரு. மு. கருணாநிதி : வந்ததாக ஞாபகம் இல்லை என்று சொல்கிறார் அமைசசரவர்கள். இதோ இந்தக் கடிதம். எம்.ஜி.ஆர். மன்றம், மணச்சநல்லூர், லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம், இந்தக் கடிதத்திலே மினிஸ்டர் பார் ஹெல்த், 12-த் பிப்ரவரி 1979, கவர்ன்மெண்ட் ஆப் தமிழ்நாட் என்ற முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய அலுவலக முத்திரை குத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரை குத்தப்பட்டது நேராக எதிர்க்கட்சித் தலைவருக்குப் போயிருக்கிறது. ஆகவே, இதுவே விசாரணைக்குரிய ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் இதைப்பற்றி நாம் விசாரித்தாக வேண்டும். நான் மேலும் ஒன்றை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களிடத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்வது என்னவென்றால், அவர்கள் குடிசை மாற்று வாரியத்தைப் பற்றிப் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். எவ்வளவோ மனுக்கள் எங்களுக்கு வருகின்றன. அப்படி மனுக்கள் வருகின்றபொழுது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பார்வர்டட், பார் கன்சிடரேஷன், பார் டிஸ்போசல், பார் நெசசரி ஆக்ஷன் என்று போடுவது சாதாரண மரபுக்கு உகந்ததாக இருந்து வருகிறது. அதை அவர்களும் நன்றாக அறிவார்கள். ஆகவே, அதிலே உள்ள சம்பவங்களுக்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டு உத்தரவு போடுவதாக அது அமையாது. அதைப்பற்றியும் தாங்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 22]

திரு. மு. கருணாநிதி : மாநகராட்சித் தேர்தல் முடிந்த பிறகு இறக்கி விடலாம் என்ற மனப்பான்மை ஆளுங் கட்சியில் இருக்கின்றவர்களுக்கு இருக்கின்றது என்பதற்காக அதைக் குறிப்பிட்டேனே அல்லாமல் வேறல்ல. இன்னொன்றைச் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஒரு வேளை ஏறகனவே இருந்த பழக்கத்தின் காரணமாக அந்த உணர்வில் இருப்பவர்கள் இங்கேயும் இருக்கலாம்.

திரு. மு. கருணாநிதி : உங்கள் பழக்கம் எங்களுக்கு எப்பொழுதும் கிடையாது. அதெல்லாம் உங்கள் பழக்கம்.

தலைவரவர்களே, நம்முடைய பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சொன்னதற்கு விளக்கம் அளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொன்னார். விசாரணை வைக்கட்டும் எப்படி எனக்கு வந்தது என்று கேட்க; நான் சொல்வது, மணச்சநல்லூர் எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர் சுப்பிரமணியம், வேறு யாரும் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் அல்ல, முசிறிப்புத்தன் இப்படி அங்கே வசூல் செய்கிறார், அரிசி ஆலை அதிபர்களிடம், பத்திரிகையின் பெயரைச் சொல்லி என்ற குற்றச்சாட்டை எழுப்பியிருக்கிறார் என்பதற்கு ஆதாரமாகத்தான் இந்தக் கடிதத்தைக் காட்டினேன்.

திரு. பி. முசிரிபுத்தன்(அமைச்சரின் பேரவைச் செயலாளர்) : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதத்தைப் படித்திருக்கிறார்கள். அவர் படித்துக் காட்டிய கடிதத்தின்படி, அப்படியொரு முயற்சி அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத்தின் சார்பில் எடுக்கப்படவும் இல்லை. அப்படி வசூலிக்கப் போனவர்கள், அவர்களுடைய கடிதத்தின்படி, அவர்கள் யாரும் எங்கள் உறுப்பினர்கள் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், இதுபோல கடிதங்களை அச்சடிப்பதும், எழுதுவதும் உள்ள இதுபோன்ற ஆதாரங்களைக்கொண்டு வந்து தேவையில்லாமல சபையிலே சொல்வதும் அவருக்கு அழகு அல்ல. இந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட நபர்கள் யாரும் கழகத தோழர்கள் அல்ல. எங்கள் மன்றத்தைப் பொறுத்த அளவில் அப்படிப்பட்ட பத்திரிகை எதுவும் நடத்துவதாக உத்தேசம் இல்லை.

[பிற்பகல் 12-30]

அது மட்டுமல்ல. அத்தகைய முயற்சிகள் எதையாவது நாங்கள் எடுத்திருக்கிறோமா என்பதற்கு அவரிடம் அது சம்பந்தப்பட்ட அதிகாரபூர்வமான ரசீது ஏதாவது இருந்தால் அதை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான இங்கு படித்துக் காட்டியதெல்லாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.ஜி. ஆர். மன்றத்தைச் சேர்ந்த செயலாளர் எழுதிய கடிதத்தைத்தான் படித்தேன். ஆளுங் கட்சிக்காரர்களே அவரைப்பற்றி குறை கூறி, முறைகேடாக நடந்திருக்கிறது, இவ்வாறு வசூலாகிறது என்று எழுதியதைத்தான் படித்துக் காட்டினேன்.

திரு. பி. முசிரிபுத்தன் : ஏனென்றால், மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் மீது இதுபோன்ற ஒரு கடிதத்தை எதிர்க் கட்சித் தலைவர் படித்ததையும் இங்கே கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : அவையெல்லாம் சபை நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறது. திரும்பப் படித்துப் பார்த்தால் தெரியும்.

அடுத்து, மதுரையில் 'சோலார் பார்மசியூட்டிக்கல்ஸ் இன் டஸ்ட்ரீஸ்' என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த கம்பெனிக்கு ஒரு ஆண்டு ஸ்பிரிட் கோட்டா 40,000 ப்ரூஃப் லிட்டர் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது ; 1977-78-ல் இதுவரை கூடுதலாகப் பெற்ற அட்ஹாக் கோட்டா 80,000 ப்ரூஃப் லிட்டர். ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதே 40,000 ப்ரூஃப் லிட்டர். ஆனால், 1977-78-ல் கூடுதலாகப் பெற்ற அட்ஹாக் கோட்டா 80,000 ப்ரூஃப் லிட்டர். இது ஆண்டு கோட்டாவைவிட இரண்டு மடங்காக ஆக்கப்பட்டிருப்பது என்பது முதல் ஊழல். ஆக, மொத்தம் கோட்டா 1,20,000 ப்ரூஃப் லிட்டரில் இதுவரையில் எடுத்திருப்பது 75,000 ப்ரூஃப் லிட்டர். அதில், உண்மையில் மருந்துக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பது 25,000 லிட்டர் போக, மீதி 50,000 லிட்டரில் கள்ளத்தனமாக ஜிஞ்ஜர் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அன்ரெஸ்டிரிக்டட் மருந்துகள் என்ற பெயரில், காம்பனன்ட்ஸ் பென்சாயின், சோப் எலிமெண்ட் என்ற பெயரில் தயாரித்து, அவைகள் ரிலீசாகி இருக்கின்றன. இப்படிச் செய்வதன் நோக்கம், ஒரு ஜிஞ்ஜர் பாட்டிலுக்கு டியூடி சுமார் ரூ. 5. நிதியமைச்சருக்கு, எவ்வளவு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது, எப்படி ஏமாற்றப்படுகிறோம் என்பதற்காக இதை எடுத்துக் காட்டுகிறேன். பென்சாயின் ஜிஞ்ஜர் தயாரிப்பதாகப் பெயர் சூட்டிவிட்டால் அதற்கு டியூடி ரூ. 2 என்றிருக்கிறது. ஆக, ஒரு பாட்டிலுக்கு ரூ. 3 இலாபம் கம்பெனிக்கு ; அரசுக்கு ரூ. 3 நஷ்டம், ஒரு பாட்டிலுக்கு. ஆண்டொன்றுக்கு அரசாங்கத்திற்கு ரூ. 4 இலட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்படுகிறது, இது இரண்டாவது ஊழல்.

ஜிஞ்ஜர் பாட்டில்களைத் தயாரித்து, நெல்லை, மதுரை, முகவை மாவட்டங்களை மதுக்காடாக இன்றைக்கு மாற்றி வருகிறார்கள். இது மூன்றாவது குற்றச்சாட்டு. இதை அரசு

அதிகாரிகள் கவனிப்பதில்லையா, நடவடிக்கை எடுப்பதில்லையா என்ற கேள்வியை எழுப்பக்கூடும். விசாரிக்க வருகிறார் ஒரு டெப்புட்டி கமிஷனர். அவர் விசாரிக்க வரும்போது, அந்தக் கம்பெனியின் முதலாளி ராகவன் என்பவருடைய காரிலேயே தான் வருகிறார். அவருடைய காரிலேயே வந்து விசாரிக்கிறவர் அங்கே இருக்கிற தவறுகளை எப்படிக் கண்டு பிடிக்கமுடியும் ? டி.எஸ்.பி. ஒருவர் இருக்கிறார். அவருடைய அன்றாடச் செலவுகள் அந்தக் கம்பெனியாலேயே கவனித்துக்கொள்ளப்படுகிறது. சீனியர் டிரக் இன்ஸ்பெக்டர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு மாதந் தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை அந்தக் கம்பெனியால் செல விடப்படுகிறது. மேலும் அவருடைய மகனுக்கு, அந்த டிரக் இன்ஸ்பெக்டர் மகனுக்கு லட்சுமி சிட் பன்ட்சில்—இந்த சோலார் பார்மசியூட்டிக்கல்ஸ் இன்டஸ்ட்ரியின் அதிபர் ராகவன் இருக் கிறாரே, அவருடைய கம்பெனிதான் அந்த லட்சுமி சிட் பன்ட்சும் —அந்தக் கம்பெனியில் சீனியர் டிரக் இன்ஸ்பெக்டர் மகனுக்கு வேலையும் தரப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் நியமிக்கப்பட் டிருக்கிற அரசு ஊழியர் மாதந்தோறும் கம்பெனி தரும் லஞ்சத் தைப் பெற்றுக்கொள்கிறார். ஆண்டு கோட்டாவை 40,000 லிட்டரிலிருந்து 1 இலட்சம் லிட்டராக உயர்த்த டெப்புட்டி கமிஷனர் இப்பொழுது சிபாரிசு செய்திருக்கிறார் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது.

இப்படிச் சேர்க்கப்பட்ட லட்சக்கணக்கான ரூபாயில் பழங்கா னத்தம் பை-பாஸ் சாலையில் புதிய கட்டிடத்தை இந்த அதிபர் கட்டியிருக்கிறார் என்று சொல்கிறார்கள். அதற்கு நமது முதல் அமைச்சர் அவர்கள் திறப்பு விழா நடத்துவார் என்று கூறிக் கொண்டிருக்கிறார். முதலமைச்சர் அதற்குச் செல் வாரோ இல்லையோ அது தெரியாது—ஆனால் முதலமைச்சர் அவர்கள் திறப்பு விழா நடத்தப்போவதாக அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி பெரிய ஊழல் ஜிஞ்ஜர் என்கிற பெயரால் கிட்டத் தட்ட 80 ஆயிரம் லிட்டர்கள் அதிகமாக பெற்று 40 ஆயிரம் லிட்டர்கள்தான் அனுமதி பெற்றிருக்கிறார்கள்—ஆனால் அந்தக் கம்பெனிக்காரர்கள் 80 ஆயிரம் லிட்டர்கள் அதிகமாகப் பெற்று 2, 3 மாவட்டங்களை மதுக்காடாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் கள், இந்தச் சூழ்நிலையில் நீங்கள் என்னதான் மது விலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தினாலும், அது வெற்றி யடையுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மிகப் பெரிய மனிதர்கள் எல்லாம் அந்த முதலாளியின் பக்கத்திலே இருக்கிறார்கள் என்றும், அந்தப் பெரிய மனிதர்கள் யார் யார் என்பதை முதல்வர் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என் பதையும் கேட்டுக் கொள்கிறேன்.

சொல்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ள வர்கள் சர்க்காரியா விசாரணையில் குற்றவாளிகள் என்று நிரூபிக் கப்பட்டவர்கள்—நேற்றைக்குக்கூட நமது முதல் அமைச்சர் அவர் கள் சொல்லியிருக்கிறார்கள். டெல்லி நாடாளும் மன்றத்திலே உள்ள அமைச்சர், சர்க்காரியா விசாரணையில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டிருக்கிற கருணாநிதியை அடிக்கடி சந்திக்கலாமா என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நிருபர்களிடம் கேட்டிருக்கிறார்கள்.

ஏதோ அங்கே ஓட்டு போடாததற்குக் காரணம் கேட்டபோது ஜார்ஜ் பெர்னான்டஸ் என்னை வந்து சந்தித்தது மிகப் பெரிய குற்றம் என்கிறார். சர்க்காரியா விசாரணையில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டிருக்கும் என்னை வந்து சந்தித்து விட்டார் —சர்க்காரியா விசாரணையில் ஒன்றிரண்டு குற்றங்கள் மட்டும் நிரூபிக்கப்பட்டு குற்றவாளி என்று சொல்லப்படும் என்னை சந்திப் பது குற்றம் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே சர்க்காரியா கமிஷனில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்ட நாவலர் நெடுஞ் செழியனை தங்கள் கட்சிக்குப் பொதுச்செயலாளராக ஆக்கியிருக் கிறீர்களே, அதைவிட வெட்கக் கேடு வேறென்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மைசூர் மாநிலத்திலே குரோவர் கமிஷன் நியமிக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அவரை பிரதம மந்திரியே வந்து சந்தித்திருக்கிறார்கள்: கைகுலுக்கியிருக்கிறார்கள். மற்ற மந்திரிகளும் வந்து சந்தித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்—சர்க்காரியா கமிஷ னில் குற்றவாளி என்று சொல்லப்பட்ட கருணாநிதியை, டெல்லி அமைச்சர் வந்து பார்க்கக்கூடாது, பேசக் கூடாது என்று. ஆனால் அதே கட்சியில் இருந்த நாவலர் நெடுஞ்செழியனை அதே சர்க்காரியா கமிஷனில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டவரை உங்கள் கட்சியில் பொதுச் செயலாளராகவே போடப்பட்டிருப் பதை என்ன நியாயம் என்று முதல் அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது ஊழல் புகார் சொல்லப்பட்டு இருப்பதற்கு முதல் காரணமே, அப்போதிருந்த காங்கிரஸ் கட்சிக்காரர் ஒருவர் சத்யா ஸ்டுடியோவிற்கு நிலம் கொடுத்த விவகாரம்தான். அந்த விவகாரம் என்ன? 39 கிரவுண்டு 60 ஸ்கொயர்பீட் நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. அவர் கட்சியை விட்டுப்போன பிறகு அடுத்த ஆண்டே அறிக்கை விட்டார் அந்த நிலங்களைத்திருப்பிக் கொடுத்து விடப்போவதாக—ஆனால் 73-ல் கொடுக்கவில்லை. பிறகு 26—5—76 அன்று அந்த நிலங்களை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுத்தார். அதை அரசு 28—5—76-ல் வீட்டு வசதிவாரியத் திடம் ஒப்படைத்தது. நிலத்தை ஒப்படைத்தபோது அனுபவித்த

காலத்திற்கு குத்தகை பாக்கி 1,26,350 ரூபாய் செலுத்தப்படாமல் இருந்தது. இன்றளவும் அது செலுத்தப்படவில்லை. குத்தகை தொகை அதிகமாக, இருப்பதாகவும் அதைக் குறைக்க வேண்டும் என்றும் மனு கொடுக்கப்பட்டது. இந்த மனு ஆர்பிட்ரேஷனில் போடப்பட்டு, சத்யா ஸ்டுடியோவின் சார்பில், என். சி. இராகவாச்சாரியார் ஆஜரானார். அதற்குள் எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆகிவிட்டார். ஆர்பிட்ரேஷனில் எந்தப் பிரச்னை வந்தாலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை மேல் நடவடிக்கை தொடரப்பட வேண்டும் என்பது விதி. ஆனால் இந்த விதிக்கு மாறாக அது சம்பந்தமான பைல் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் லாக்கரில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கிறது. கிணற்றில் போடப்பட்டிருக்கிறது. அந்த பைலுடைய எண் கூட ஏ2/36745/76.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழக ஆட்சியில் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆக இருந்தபோது சத்யா ஸ்டுடிரோயாவிற்குப் பின்னால் பயன்படுத்தப்படாமல் போடப்பட்டிருந்த நிலம். . . . .

திரு. மு. கருணாநிதி : அப்பொழுது அண்ணா அவர்கள் இருக்கவில்லை.

[பிற்பகல் 12-40]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நீங்கள் இருந்த போதா, சரி ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, தி. மு. கழகம் ஆட்சியில் இருந்த போது அமரர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது , சத்தியா ஸ்டுடியோவுக்குப் பின்னாலே இருந்த எதற்கும் பயன்படாமல் போடப்பட்டு இருந்த நிலம் (குறுக்கீடு) அதை ஏற்றுக் கொள்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் உண்மை அதுதான். நான் ஒன்றைச் சொல்கிறேன், அதற்கு முதலில் கொடுக்கப்பட்ட வாடகை, கொடுக்க வேண்டும் என்று சொல்லியது— எனக்குத் தெரிந்தவரையில் ஒன்பதாயிரத்து சில்லரை ரூபாய் ஆண்டுக்கு. நான் கழகத்தை விட்டு வெளியேற்றப்பட்டபிறகு ஏதோ என்னவோ தெரியவில்லை. அதற்கு திடீரென்று ஒரு ஆண்டுக்கு லட்ச ரூபாய்க்கு மேல் வரி போடப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அதைக் கொடுக்க முடியாது என்றும், அப்படிக் குத்தகைப் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் சட்டத்தில் இல்லை என்பதையும் தெரிவித்து வழக்கு மன்றத்திற்குப் போயிற்று. வழக்கு மன்றத்தில் இருக்கிறது. இன்னும் தீர்ப்பு ஆயிற்றா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் நிலைமை என்னவென்றால், ஏமாற்றுவதற்காகவோ அல்லது அந்த நிலத்தை வைத்துக் கொள்வதற்காகவோ

லாபத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவோ பயன்படுத்தவில்லை என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும். அந்த நிலத்தை ஏன் ஸ்டுடியோவிற்கு சொந்தக்காரர்கள் எடுத்துக் கொண்டார்கள். வேண்டும் என்று கேட்டார்கள் என்றால், பக்கத்திலே நாதசுவரம் சொல்லிக் கொடுக்கும் இடம், பாட்டு சொல்லிக் கொடுக்கும் இடம் இருக்கிறது. அவைகளைத் தொடர்ந்து அந்த இடத்திற்குக் கொண்டு வருவார்களானால் அங்கே படப்பிடிப்பு நடைபெற முடியாது.

ஆகவே அந்த இடத்தைப் பெற்று பயன் இருக்கிறதோ இல்லையோ, அந்த இடத்தில் வேறு தொல்லைகள் ஏற்படாமல் அந்த ஸ்டுடியோ காப்பாற்றப்பட வேண்டும், தொழிலாளர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்று அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் வாடகை அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு வழக்கு மன்றத்திற்குச் சென்ற பிறகு, அந்தப் பிரச்சினை எந்த லாபத்தையும் கருதாமல் நடைபெற்றது என்ற நிலைமையில் ஒரு முடிவை எதிர்பார்த்து காத்துக் இருக்கிறது என்பதையும் என்னைப் பொறுத்த வரையில் நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். மீண்டும் சொல்லிக் கொள் கிறேன், எனது லாபத்தைக் கருதி அந்த இடத்தை எடுத்துக் கொண்டதாக, பயன்படுத்தியதாக இங்கே இருக்கின்ற எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் நிரூபிப்பார்களானால் முதலமைச்சர் பதவியை நான் ராசினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். (ஆரவாரம்) (கைதட்டல்) இந்த ஒரு காலத்திலே திரு. எம். ஜி. இராமச்சந்திரன் லாபத்தைச் சம்பாதிப்பதற்காக அதைப் பயன் படுத்தினார் என்று நிரூபிப்பார்களானால் நான் இந்த முதலமைச்சர் பதவியை ராசினாமா செய்கிறேன் என்பதை மீண்டும் சொல்கிறேன். ஏதோ மக்களை ஏமாற்றி அல்லது அரசை ஏமாற்றி எடுத்துக் கொண்டது போலவும், கொடுக்க வேண்டிய வாடகையைக் கொடுக்காமல் இருப்பதைப் போலவும் சொல்வது நியாயமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 9 ஆயிரத்து சில்லரை ரூபாய் ஆண்டுக்கு குத்தகையாகச் செலுத்தப்பட்ட பணம் லட்ச ரூபாய்க்குமேல் அதற்கு போடப்பட்டு கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது நிலைமை எப்படி ஏற்படும் என்றால் வழக்கு மன்றத்திற்குப் போவதைத் தவிர வேறு என்ன? வழி அதிலும் கூட அவர்கள் சரியாக ஒத்துழைக்க முடியாத நிலையில் இருக்கிறபோது அந்த இடத்தைத் திரும்பக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த வகையில் இப்படிப் பட்ட பழைய குற்றச்சாட்டுக்களை உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களை, நியாயத்திற்கு உட்படாத குற்றச்சாட்டுக் களை, ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக வெளியிடுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே; நான் சொல்ல வந்தது, வாடகை உயர்த்தப்பட்டதைப் பற்றியோ, அல்லது அந்த இடம் கொடுக்கப்பட்டதைப் பற்றியோ அல்ல. அவர் கூட

சொன்னார், அண்ணாகாலத்தில் தரப்பட்டதாக. எனக்கு நினைவு, நான் முதலமைச்சரான பிறகு, அதுவும் ஒரே நாளில் 3 அமைச்சர்களின் கையெழுத்து பெற்று, அந்த இடம் தரப்பட்டது. அதற்கு அந்த பைல்கள் எல்லாம் ஒரு முறை சட்டமன்றத்தில் காட்டப்பெற்று விவாதங்கள் நடைபெற்று இருக்கின்றன. அதற்கு வாடகை உயர்த்தப்பட்டது எவ்வளவு ரூபாய் என்பது பிரச்னை அல்ல. அதற்கு ஒரு மனு கொடுத்தார்கள். அது ஆர்பிடரேஷனுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது. அந்த மனு விசாரணைக்கு வந்த போது அந்த விசாரணையில் ஸ்டுடியோ சார்பில் யாரும் ஆஜராகவில்லை. நான் கூறுகின்ற குற்றச்சாட்டு அடுத்தது, ஆர்பிடரேஷனுக்கு எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் 3 மாதத்திற்கு ஒரு முறையேனும் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது விதி. ஆனால் அந்த மேல் நடவடிக்கை ஏதும் அந்த ஆர்பிடரேஷன் மீது எடுக்காமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பைலை அப்படியே கிடப்பில் போட்டு விட்டார். லாக்கரில் வைத்துவிட்டார் என்பது குற்றச்சாட்டு, அந்த ஆர்பிடரேஷன் நடத்தப்படவில்லை என்பதுதான் குற்றச்சாட்டே தவிர வேறு அல்ல.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆர்பிடரேஷன் நடத்தினார்கள், யாரும் ஆஜராகவில்லை என்று சொல்கிறார்கள். அது எந்த ஆண்டு என்று சொன்னால் உதவியாக இருக்கும்.

திரு கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார். நான் முதலிலேயே எழுந்தேன். மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொல்கிறபோது அங்கே சாராயம், ஜிஞ்சர் காய்ச்சப் படுவதாகவும் மதுரையில் போலீஸ் அதிகாரிகள், டி. எஸ். பி., சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகியோருக்கு மாமூல் தரப்படுகிறது என்றும், முதலமைச்சர் அவர்களிடத்திலே பெரும்புள்ளி இருப்பதாகவும் சொன்னார்கள். நான் மதுரையைச் சேர்ந்தவன என்கிற காரணத்தால் அதை அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தான் முதலமைச்சராக இருந்த போது மாண்புமிகு இந்நாள் முதலமைச்சர் அவர்களுக்கு சத்தியா ஸ்டுடியோவுக்கு இடம் கொடுக்க ஒரே நாளில் 3 அமைச்சர்களிடத்தில் கையெழுத்து வாங்கி உத்தரவு பிறப்பித்ததாகச் சொன்னார்கள். அது சலுகை அல்லவா என்ற விவரத்தையும் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மன நிறைவோடு சொல்கிறேன். எப்படிக் கையெழுத்திடப்பட்டது, எப்படி கொடுக்கப்பட்டது என்பதேகூட அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில்தான் என்பது தெரியும். ஆகவே என்னை

இதில் உட்படுத்தமாட்டார் என்று நான் கருதுகிறேன். எப்படி கேட்கப்பட்டது. எப்படி கொடுக்கப்பட்டது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அந்த ஸ்டுடியோவுக்கு நான் சொந்தக்காரன் இல்லை என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். இப்போது எனக்கு அதில் சொந்தமில்லை என்னுடைய பங்குகளை எல்லாம் நான் கொடுத்து விட்டேன். என்றாலும் ஒன்றைநான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த தேதியை மட்டும் தயவு செய்து சொன்னால் உதவியாக இருக்கும்.

திரு கே. கந்தசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டு, கொடுத்தார்கள் என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு கலைஞர் அவ்வாறு உத்தரவு போட்டார் என்பதாகத்தான் குறிப்பிட்டேன்.

திரு மு. கருணாநிதி : 26–5–76-ல் திருப்பிப் பெற்றுக் கொள்ளப்பட்டது. 26–5–76-ல் அரசாங்கம் திருப்பிப் பெற்றுக் கொண்டு, 28–5–76-ல் அப்போது அனுமதித்த காலத்திலுள்ள குத்தகைப் பாக்கிக்காக அரசாங்கம் ஒரு நோட்டீஸ் கொடுத்தது. அந்த பாக்கி மிகவும் அதிகம்—அது அதிகமான வாடகை என்று ஸ்டுடியோ சார்பில் மனு கொடுக்கப்பட்டது. ஆக, 1976 முதல் 1979 வரையிலுள்ள அந்த இடைக்காலத்தில்தான் ஆர்பிட்ரேஷன் எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த இடைக்காலத்தில் இரண்டு முறை கூடியும், ஆர்பிட்ரேஷன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும் யாரும் ஆஜராகவில்லை.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. ஆர்பிட்ரேஷனில் எந்தப் பிரச்சினை வந்தாலும் 3 மாதத்திற்கு ஒரு முறை மேல் நடவடிக்கைத் தொடரும் என்பதே விதி. ஆனால் ஆர்பிட்ரேஷன் நடத்துகிறவர் மாவட்ட ஆட்சித் தலைவர்; அவர் லாக்கரிலே பூட்டி வைத்துவிட்டார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி. 1976-லே அந்த நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அப்போது விசாரணைக்கு வந்தது என்று சொல்கிறார்கள், மகிழ்ச்சி. நான் கழகம் தொடங்கிய பிறகு எந்த அளவுக்கு இருந்தேன் என்பதை விட நிர்வாகத்தில் எப்போதும் எனக்கு தொடர்பு இருந்ததில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். நிர்வாகத்திலிருந்து ஆர்டர் அனுப்பவில்லை என்றால் இந்த செய்திக்குப் பின்னால் அந்த ஸ்டுடியோவுக்கு சொந்தக்காரர்களாக இருக்கிறவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக அவர்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு மு. கருணாநிதி: நீதிமன்றங்களிலே (மணியடிக்கப்பட்டது) இன்னும் 15 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். நீதிமன்றங்களிலே எப்படிப்பட்ட தலையீடுகள் இருக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டம் கிழக்கு சரக காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் 31-1-78-ல் தலைமைச் செயலக உள்துறைத் துணைச் செயலாளருக்கு ஒரு டி. ஓ. லெட்டர் எழுதுகிறார்.

I Ravi Arumugam, I.P.S.,
Superintendent of Police,
Chingleput East District, St. Thomas Mount,
Madras-16

D.O.C. No. 6691/C1/78

Dear Thiru Eswara Sastry,

Sub ; Criminal Cases St. Thomas Mount u/s 304/(A)
P. S. Crime No. 7‹8/77-I.P.C.
Copies of Depositions of witnesses.

Ref: D.O. R.C./1592/44 Courts-I/77-3 Home dated 2, 20—11—78.

இங்கிருந்து எழுதப்பட்ட டி. ஓ. லெட்டருக்கு ரவி ஆறுமுகம் சூப்பரின்டெண்டு ஆப் போலீஸ் பதில் எழுதுகிறார். அந்த வழக்கு விரைவாக நடைபெறாமல் இருப்பதற்கு சில தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் விரைவிலே அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று இங்கே இருக்கிற டிபுடி செக்ரட்டரி, ஹோம் டிபார்ட்மெண்டுக்கு கடிதம் எழுதுகிறார். அதன் காப்பியில் அதே ரவி ஆறுமுகம் குறிப்பிட்டிருக்கிறார்,

Copy to the Inspector of Police.
He is requested to push through the trial
in this case in court.

என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார். அதோடு விட்டாரா? அதனுடைய காப்பி சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட், பூந்தமல்லிக்கும் போகிறது.

Copy to Sub-Divisional Magistrate, Poonamalli.
He is requested to complete the trial in this case
in the court as quickly as possible, since the
Government is keenly watching the progress in
this case.

[பிற்பகல் 12-50.]

போலீஸ் அதிகாரிகளே பூவிருந்தவல்லியிலே உள்ள ஒரு நீதிபதிக்கு சப்-டிவிஷனல் ஜுடிஷியல் மாஜிஸ்ட்டிரேட்டுக்கு கடித்தினுடைய நகலை அனுப்பி

'He is requested to complete the trial in this case in the court as quickly as possible, since the Government is keenly watching the progress in this case.'

இவ்வாறு எழுதினால் என்ன பொருள்? இந்த விஷயத்திற்கே நீதியிலே தலையிடுகின்றார்கள். விஷயம் சாதாரணமானது தான். அதை விளக்க விரும்பவில்லை—அதிலே சம்பந்தப்பட்டவர் ஒரு அமைச்சர், அவர் பெயரையும் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் இந்த சாதாரணமான விஷயத்திற்கே, நீங்கள் நீதிபதிக்கே போலீஸ் துறையிலே இருந்து பிரதிகளை அனுப்பி வைக்கின்ற அளவிற்கு நீதியில் தலையீடு இருக்குமேயானால் இதைவிட பெரிய வழக்குகளில் எந்த அளவிற்கு இந்த அரசு நீதியிலே தலையிடுவதற்கான சூழ்நிலைகள் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

எனவேதான் இந்த உதாரணத்தை மாத்திரம் எந்த அளவிற்கு அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்காகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் தமிழ்நாட்டிலே உள்ள பல்வேறு பிரச்சினைகள் இங்கே விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டு மக்கள் எந்த அளவிற்கு கிளர்ந்து எழுந்திருக்கிறார்கள். இந்த அரசினுடைய போக்கில் அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதற்கு நாள்தோறும் வளர்ந்துகொண்டு வருகின்ற செய்திகளே தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

சிம்கோ மீட்டர் விவகாரத்திலே இந்த அரசு எப்படி நடந்துகொண்டது, கடைசியாக பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு, சட்டசபையிலேயே வரலாறு காணாத நிகழ்ச்சிகளெல்லாம் ஏற்பட்டு அதற்குப் பிறகு ஒரு முடிவு ஏற்பட்ட பிறகு, அந்த அதிபர் எங்கள் 12 (3) செட்டில்மென்ட்டை உடைக்காமல் பார்த்துக் கொண்ட இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் என்கின்ற அளவிற்கு அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றார் சிம்கோ மீட்டரினுடைய அதிபர் என்றால் தொழிலாளர் நலத்துக்கு விரோத அரசாக இந்த அரசு எப்படி செயல்படுகிறது....

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:</u> தலைவரவர்களே, மற்ற சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் வெற்றி வெற்றி என்று கோஷம் போட்டு மிட்டாய் எல்லாம் கொடுத்து பாராட்டு விழா நடத்திவிட்டு வேலைக்குச் சென்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 மார்ச் 22]

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் சொல்வது 12(3) செட்டில்மெண்டை உடைக்கவில்லை என்று......

திரு. ஈா. உமாநாத்: மற்ற சங்கத்தைச் சார்ந்தவர்கள் வெற்றி வெற்றி என்று சொன்னதாக அமைச்சரவர்கள் சொல்லு கிறார். மற்ற சங்கத்தைச் சார்ந்தவர்கள் நாங்கள் தான். நாங்கள் தெளிவாக இந்த அவையிலே அவர் அறிக்கை படிக்கிற போதே 23 பேரை பழிவாங்குவது என்பது மற்ற பர்மனன்ட் தொழிலாளருக்கு உயிர் கொடுக்காமல் இருப்பது—தொழி லாளர்களை மிருகத்தனமாக வெளியே நிறுத்தி இருப்பது ஆகியவற்றிற்கு ஆட்சேபணை செய்து வெளிநடப்புச் செய்திருக் கிறோம். பிறகு வந்திருக்கக்கூடிய 12(3) சம்பந்தமாக வந் திருக்கிற கோஷம் நாலரை ரூபாய் ஆறாகி இருக்கிறது என்பது எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன இவ்வளவு விவகாரத்திற்குப் பிறகு நடந்திருக்கிறது. அந்த விஷயத்திற்காக அவர் குறிப் பிட்டிருக்கிறார்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, என் பணியை ஏற்றுக் கொண்டதற்காக திரு. உமாநாத் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஆவடி சைக்கிள் தொழிற்சாலையிலே தொழிலாளர்களுடைய போராட்ட உணர்வை, அவர்களுடைய ஒற்றுமையைக் குறைக்கிற வகையில் அரசு செயல்பட்டது பற்றி இந்த அவையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது.

கரூர் எல்.ஜி.பி. பேருந்து தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தில் எந்த அளவிற்கு அத்துமீறி காவல்துறையினர் மிருகத்தனமாக நடந்துகொண்டார்கள் என்பதையும் நாடு அறியும்.

நேற்று முன்தினம் பொள்ளாச்சியிலே குவாலிட்டி மில்லில் எண்பது தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருந்தவர்கள் கைது செய்யப்பட்டு போலீசார் உள்ளே சென்று அவர்களையெல்லாம் தாக்கி இருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்துகொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளுடைய குரல் ஆங் காங்கு பொங்கி வெடித்துக்கொண்டிருக்கிற செய்திகள் நாள் தோறும் வந்துகொண்டிருக்கின்றன. கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய இன்னல்களை போக்கிக்கொள்ள வழிவகை தெரியாமல் இன்றைக்கு திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. மு. கருணாநிதி] [1979 மார்ச் 22

வழக்கறிஞர்கள் கிளர்ச்சியில் அவர்கள் வைத்துள்ள சாதாரண கோரிக்கை ஒரு துணை நடிகையைக் கைது செய்த ஒரு போலீஸ் அதிகாரியை சஸ்பென்ட் செய்தீர்களே, ஒரு வழக்கறிஞரை அடித்த போலீஸ் அதிகாரியை சஸ்பென்ட் செய்யக்கூடாதா என்று உருக்கமாகக் கேட்கின்ற அந்தக் கோரிக்கையைக் கூடக் கேட்காமல் பிடிவாதத்தோடும் அதே நேரத்தில் நீதி விசாரணைக்கும் தயாரில்லை என்கின்ற அந்த பிடிவாதத் தோடும் அரசு நடந்துகொண்டு சட்டம், ஒழுங்கு, அமைதி தமிழகத்திலே கெடுவதற்கான சூழ்நிலையை இந்த அரசு இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் நான் இங்கே சாட்ட விரும்புகிறேன்.

இன்று கூட திராவிட கழகத் தோழர்கள் ஏறத்தாழ மூவா யிரத்துக்கு மேற்பட்டவர்கள் கோட்டையை நோக்கி ஊர்வலமாக வந்து மறியலில் ஈடுபட்டு திராவிடர் கழகப் பொதுச் செய லாளர் திரு. வீரமணியும் மற்றும் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களும் ஆடவரும் பெண்டிரும் இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏன் அந்த மறியலில் ஈடுபட்டார்கள் என்பது முதலமைச்சருக்குத் தெரியும். அவையில் உள்ள பெரியார் மீதும் அண்ணா மீதும் பெரியாருடைய அருமைத் துணைவியார் நாகம்மையார் மீதும் அன்பும் பாசமும் கொண்ட அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

அரசுக்கு கவிஞராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றவர். இந்த அரசவைக் கவிஞர் . . .

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏதோ ஒரு சம்பவம் பற்றி சொல்லப்பட்டது. துணை நடிகை ஒருவரைக் கைது செய்ததற்காக ஒரு அதிகாரியை சஸ்பென்ட் செய்ய முடி யும் என்றால் வக்கீலை அடித்ததற்காக ஏன் ஒரு அதிகாரியை தற்காலிக வேலை நீக்கம் செய்யக்கூடாது என்று வழக்கறிஞர் கள் கேட்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஒன்றை டணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தனை மணி நேரத்திற்குப் பிறகு பெண் களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதை மீறுகின்ற வகை யில் யாராவது நடந்தால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள் என்பதற்காக இந்த மாமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு ஆத்திரப்பட்டார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அந்த நிலையில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒருவருக் கொருவர் அடித்துக் கொண்டார்கள் என்று இருவரும்

புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒருவருக்கு ஒருதலைப் பட்சமாக ஆதரவு தரமுடியும் என்ற நிலையிருப்பது முறையல்ல என்ற நிலையில் சஸ்பென்ட் கிடையாது என்று சொல்லுகிறோமே தவிர யார் யார் மீது தாக்குதல் நடநதது என்பதையும் ஒருவர் ஒருவரை தாக்கினார் என்றும் அதே போன்று இன்னொருவர் தாக்கப்பட்டார் என்றும் இரு தரப்பிலிருந்தும் புகார்கள் வருகின்ற நேரத்தில் போலீஸ் துறையினர் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என் பதில் யாருக்கும் வேறுபட்ட கருத்து இருக்காது. ஆனால் என்னிடம் நேரில் பேசிய வழக்கறிஞர் ஒன்றை என்னிடம் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது அப்படி சொல்லவில்லை என்று சொன்னதாக பத்திரிகைகளில் வந்திருக்கிறது. என்னை சந்தித்தபோது அவர்கள் சொன்னது நாங்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டோம். அவரும் அடித்தார்; நானும் அடித்தேன் என்று சொல்லியிருக்கிறார். நானே இதைச் சொல்லுவேன். முதலமைச்சர் என்கிற ரீதியில் அல்ல. எப்போதாவது வாய்ப்புக் கிடைத்தால் நானே இதைக் கூண்டிலேறி சாட்சியம் கூறத் தயாராக இருக்கிறேன். நேரில் என்னை சந்தித்தபோது நாங்கள் இருவரும் அடித்துக்கொண்டோம் என்று பகிரங்கமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது இருவரும் புகார்கள் செய்திருக்கிறார்கள். இருவர் மீதும் வழக்கு போடவேண்டும் என்கின்ற நிலைமை ஏற்பட்டு இருவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப பிரச்னைப்பற்றி இதைத்தான் சட்டமன்றத்தில் மறுபடியும் சொன்னேன். ஆனாலும் கூட இன்னும் நீதி விசாரணை நடத்துவதற்கு இருதரப்பாரும் ஒப்புக்கொள்ள முடியுமா என்பதில் தான் நான் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒருதலைபட்சமாக நீதி வழங்கப்படக் கூடிய நிலையில் கேள்வி கேட்க ஆள் இலலாத நிலைமையில் அதிகாரிகள் இருக்கக் கூடாது என்பதும் அதே சமயத்தில் வழக்கறிஞர்களுடைய தன்மானத்தையும் காப்பாற்றிக்கொள்ளும் முறையில், செயல்முறை, ஒழுங்குமுறை அமைய வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு கருத்துவேறுபாடு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக, முன்னால் போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது என்றால், அது துணை நடிகையை கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றார் என்ற காரணத்திற்காக — அந்த போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் ஒரு பெண் மீது இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது தவறு என்ற முறையில் தான் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டது என்பதை முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எனது இனிய எதிர்க் கட்சித் தலைவர் புரிந்து கொள்வார் என்று நம்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாலை ஆறு மணிக்கு மேல பெணகளை போலீஸ் லாக்கப்பில் வைக்கக் கூடாது என்று முன்னாள் முதலமைச்சராக நான் இருந்தபோது போலீஸ் ஐ.ஜி. மூலம் ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தப் பட்டதுதான் என்பதை இந்நாள் முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அவர்கள் குறிப்பிட்டது சென்னை கோடம்பாக்கம் ஸ்டேஷனில் அல்ல. இப்போதும், பெண்கள் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்படுகிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 13-2-1979 அன்று மிஸ்ஸி என்ற பெண் சாராய வழக்குக் காக கைது செய்யப்பட்டு, சைதாப்பேட்டையில் போலீஸ் லாக்கப் பில் வைக்கப்பட்டு, இப்போது கொண்டு வந்திருக்கின்ற அவசர சட்டத்தின் காரணமாக ஜாமீனில் வெளியே விடக் கூடாது என்ற நிலைமையில் அன்றிரவே ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார்கள். 15-ம் தேதி இன்னொரு பெண் சாராய வழக்கில் கைது செய்யப் பட்டு, பின்னால் ஜாமீன் கோரியும் கிடைக்காத காரணத்தால் அன்றைய தினம் இரவு போலீஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டு, பின்னால் தண்டிக்கப்பட்டு சென்னை சிறைச்சாலையில் வைக்கப் படுகிறாள். இந்த உதாரணங்களை எல்லாம் மறந்து விடக் கூடாது.

[பிற்பகல் 1-00].

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய விளக்கத் திற்கு நன்றி. அவருடைய எண்ணமும், என்னுடைய எண்ண மும் இந்த மகளிர்களைப் பொறுத்த வரையில் காவல் துறையிலே லாக்கப்பில் வைக்கக் கூடாது, இந்த விஷயத்திலே வேறுபட்டு இருக்கவில்லை என்று சொல்லும்போது அது எனக்கு மகிழ்ச்சி யாக இருக்கிறது. மிஸ்ஸி அம்மையாரைப் பற்றிய செய்தியைச் சொல்லுகிறார்கள். இந்த அம்மையாரைப் பற்றி யாராவது மேலதிகாரிக்குத் தகவல் கொடுத்து, ஜாமீனில் விட வேண்டும். மற்ற இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கலாம், ஆனால், தகவல் மேலதிகாரிக்குத் கிடைக்காமல் இருந்ததினால், சட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால், இது போன்ற நிகழ்ச்சி வரக் கூடாது என்பதற்குத்தான் இந்த அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, வழக் கறிஞருக்கும், போலீஸ் அதிகாரிக்கும் இடையே ஏற்பட்ட சம் பவத்தைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி சொல்லுகிறபோது, விசாரணை செய்வது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் கேட்பது, காலதாமதம் ஏன் செய்கின்றார்கள் என்பது. அதையும் சீக்கிரம் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் எப்போதுமே எனக்கு உதவியாக கேள்வி கேட்டு, நான் பதில் அளிப்பதற்கு வாய்ப்பு அளிக்கிறார் என்பதை இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்பதிலிருந்து ஒரு பதிலை என்னிடமிருந்து இந்தச் சபைக்கு கிடைக்கும்படி செய்கிறார். சஸ்பென்ட் செய்தால்தான், நாங்கள் இதிலே பேச முடியும் என்று வழக்கறிஞர்கள் இருந்தார்கள், இருக்கின்றார்கள் என்பது நிலை. அவர்கள் அதை விட்டுக் கொடுக்காததினால், இந்தப் பிரச்னை மாறி, இருவருமே குற்றவாளிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த நிலையில், இருவரும் புகார் கொடுத்திருப்பதால், அவர்கள் இருவரையும் சம நிலையில் நடத்த வேண்டுமென்ற அவசியம் அரசுக்கும் இருக்கிறது. அரசினுடைய செயலை நிறைவேற்றுகின்ற, செயல்படுத்துகின்ற அதிகாரம் அதிகாரிகளுக்கு இருக்கிறது.

நீதி மன்றத்திற்குப் போவது என்றால், வெகு எளிதில் போய் விடலாம். இங்கே முன்னாள் முதல் அமைச்சரும், இந்நாள் எதிர்க் கட்சித் தலைவருக்கு, இந்நாள் முதல் அமைச்சராகிய நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவருக்கு இதைப் பற்றி நன்கு தெரியும். என்ன நடை முறை என்பதும் தெரியும். அந்த வகையிலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இருவர் மீதும் புகார் இருக்கிறது. இருவரும் புகார் செய்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னையை மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்புவதற்கு நியாயம் இருக்கிறது ; அதிகாரம் இருக்கிறது. ஆனாலும், இது நிறுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம், இரு தரப்பாரையும் அழைத்துப் பேசி, குறிப்பாக நிர்வாகத்தில் சரியாக காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். வழக்கறிஞர்களுடைய கோரிக்கையில் நியாயமில்லை என்று சொல்லவில்லை. ஆனால், இருவரயுமே, சமமாகக் கருதி, அந்த வகையிலே நாம் இதைப் பற்றிச் சிந்திப்போம் என்று தெரிவித்திருக்கின்றேனே தவிர, வழக்கறிஞர்கள் குற்றம் செய்து விட்டார்கள் என்றோ, காவல் துறையைச் சார்ந்தவர்கள் குற்றம் செய்து விட்டார்கள் என்றோ, நான் குறிப்பிடவில்லை. நான் சொல்வதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இருவரும் ஒருவருக்கு ஒருவர் அடித்துக் கொண்டு, இருவரும் புகார் கொடுத்து, இருவரும் மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார்கள். அந்த நிலையில்தான் இந்த அரசு தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டியிருக்கிறது.

நீதிபதியை நியமிப்பதற்கு இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லையென்றாலும்,—ஒரு தரப்பார் சஸ்பென்ட் செய்ய வேண்டுமென்று கேட்கின்றார்கள் ; இன்னொரு தரப்பாருக்கு

அப்படிப்பட்ட அமைப்பு இல்லை ; கேட்பதற்கு ஆள் இல்லை. அந்த நிலையில் சஸ்பென்ட் செய்ய வேண்டுமென்று சொல்வது நியாயமாக இல்லாத காரணத்தால், அதைச் செய்வற்கில்லை. அதே நேரத்தில், வேறு ஒரு இடத்தில் தவறு செய்தார் என் பதற்கு சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், இந்தப் பிரச்னை வேறு. இது காவல் துறையைச் சேர்ந்த ஒருவருக்கும், வழக்கறிஞர் ஒருவருக்கும் இடையே உள்ள பிரச்னை. இதிலே இருவரும் ஒரு தகராறில் ஈடுபட்டவர்கள்.

ஒருவரையொருவர் அடித்துக் கொண்டதாகக் கூறுகிறார்கள். அந்த நிலையில் அவர்கள் புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, நீதி மன்றத் திற்கு நேரடியாகக் கொண்டு செல்வதற்குக் கூட நியாயமான காரணம் இருக்கிறது. சட்டம் தெரிந்த வழக்கறிஞர்கள் பலர் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள். சிலர் துடிப்போடு இருக் கிறார்கள். என்னிடத்தில் கேள்வி கேட்பதற்கு. அதையும் உணருகிறேன், யார் கேள்வி கேட்பது என்று இன்னும் முடி வுக்கு வரவில்லை என்று தெரிகிறது. அதிலும் முடிவுக்கு வந்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள்.

இது ஒரு பொதுப் பிரச்னை. காவல் துறையினர் தங்க ளுக்கு ஒரு அசோசியேஷன் வேண்டுமென்று துண்டுப் பிரசுரம் வெளியிடக் கூடிய நிலைமை இந்தச் சூழ்நிலையால் உருவாக்கப் பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றம் மறந்துவிடக் கூடாது.

* * *

ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் வழக்கறிஞர்களுக் கும் பொதுவாகப் பேசியாக வேண்டும், காவல் துறையினருக்கும் பொதுவாக இருந்தாக வேண்டும். நீதி மன்றத்தில் அதை வைப் பதற்கும் காவல் துறையினர் தயாராக இருக்கிறார்கள். அங் கேயும் நீதிபதிதான் வரப் போகிறார். மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டி லிருந்து சுப்ரீம் கோர்ட் வரை உள்ள நீதிபதிகளை நம்பித்தான் ஆகவேண்டும். தனி நீதிபதியை, விசேஷ நீதிபதியை அல்லது நீதி விசாரணை என்று சொல்லுகிறார்களே அப்படிப்பட்ட தனி நீதிபதி விசாரணை நடத்துவது என்று சொன்னால் அதற்கு ஆட்சேபணை இல்லையென்று நான் சொன்னாலும் இரு தரப் பாரும் ஒத்துக் கொள்ள வேண்டும். இதிலே ஒரு நல்ல நிலைமை ஏற்பட முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதைச் சொல்லு கின்ற நேரத்தில் பிரச்சினைகள் எங்கோ போய், வெளிப்படுத்தக் கூடாத விஷயங்களை வெளிப்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக் கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 22] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொன்ன சில குறிப்புகளை குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது * * * என்ற வகையில் சொன்னதையெல்லாம் தயவு செய்து குறிப்பேட்டிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உமாநாத் அவர்கள் எந்த வேகத்தோடு எந்தக் குறிக்கோளோடு பேசுகிறார் என்பது எனக்குத் தெரியும். அவர்களோடு கடந்த 35 ஆண்டுகளாகப் பழகியவன். எந்த அடிப்படையில் பேசுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் இல்லை. அவர் குறிப்பிட்ட இரண்டு மாநிலங்களும் அவர்கள் கட்சி ஆட்சி செய்கிற மாநிலங்கள். அவர்கள் எந்த அடிப்படையில் அசோசியேஷன் அமைத்திருப்பார்கள் என்பதும், அந்த அசோசியேஷன்கள் எப்படி அவர்களோடு ஒத்துழைக்கின்றன என்பதையும் நான் அறிவேன்.

தமிழகத்தின் நிலைமை அப்படி அல்ல. தமிழகத்தில் சுதந்திர உணர்வு அதிகம். வேறு வேறு கருத்துக்கள், வேறு வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. * * * * *

இதையும், திரு. உமாநாத் அவர்கள் சொன்னதையும் * * என்று சொன்னதையும் குறிப்பேட்டிலிருந்து நீக்க வேண்டும். வெளியே மக்களுக்குச் செய்தி பரவாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : My delivery time is ripe. தயவு செய்து நான் பேசி முடித்துவிட்டுத்தான் சபையை விட்டுப் போவதாக இருக்கிறேன். எல்லோரும் தயவு செய்து அருள் கூர்ந்து ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திருப்பித் திருப்பிப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். மாலை நேரத்தில் வர முடியாது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதில் விளக்கத்திற்காக கேட்கிறேன். ஒருவரையொருவர் அடித்துக் கொண்டதாகச் சொன்னார்கள். அப்படி வழக்கு போடப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. க. சுப்பு] [1979 மார்ச் 22

[பிற்பகல் 1.10]

வழக்கறிஞர் தனியாக ஒரு புகார் கொடுத்திருக்கிறார்....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லையோ அல்லது என்னால் அவர்களுக்குப் புரியவைக்க முடியவில்லையோ என்னவோ தெரியவில்லை. இருவரும் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதாக என்றால் அது வேறு விவகாரமாகப் போய்விடும்.......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, துணை இன்ஸ்பெக்டர் தன்னை அடித்ததாக வழக்கறிஞர் புகார் கொடுத்திருக்கிறார், வழக்கறிஞர் தன்னை அடித்ததாக துணை இன்ஸ்பெக்டர் புகார் கொடுத்திருக்கிறார். இரண்டு பேர்களும் புகார்களைக் கொடுத்திருக்கிறார்கள். அது வழக்கு மன்றத்திற்குப் போவதாக இருந்தாலும் சரி, நீதிமன்றத்திற்குப் போவதாக இருந்தாலும் சரி, இரண்டு தரப்பிலும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் சொல்லப்படுகிறது.

திரு. க. சுப்பு : போலீஸ் அதிகாரி மீது விசாரணை என்று வந்துவிட்டால் அவரை சஸ்பெண்ட் செய்யவேண்டும், போலீஸ் அதிகாரியின் மீது விசாரணை வந்தால் அவரை சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்று போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரே இருக்கிறது. அது எதற்கு இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் சொல்வதை அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். புகார் கொடுத்திருக்கிறார்கள். வழக்குப் பதிவு செய்து கோர்ட்டிற்குப் போகவேண்டுமா அல்லது நீதி விசாரணைக்குப் போகவேண்டுமா ? நீங்கள் வழக்குப் பதிவு செய்யவேண்டுமென்று சொன்னால், இமீடியட்டாக மாஜிஸ்திரேட் கோர்டிற்குப் போவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : வழக்கறிஞர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ? சப்-இன்ஸ்பெக்டர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ? போலீஸ் அதிகாரி மீது விசாரணை வருகிற

போது அவரை சஸ்பெண்ட் பண்ணவேண்டுமென்று போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் இருக்கிறது, அது எதற்காக இருக்கிறது? ஒன்று அதை மாற்றுங்கள் இல்லையென்றால்............

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சார்ஜ் ஷீட் இன்னும் கோர்ட்டிற்குப் போகவில்லையென்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும். அந்த நிலை ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கலாம். இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டாமென்ற நிலையில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. மேஜிஸ்திரேட் கோர்ட்டிற்குப் போகவேண்டுமென்று அவர்கள் அதற்கு முதலிலே தயாராக இருந்தார்கள். ஆனால், என்னுடைய வேண்டுகோளினால் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் விவாதத்திற்குள்ளே போய்க்கொண்டிருப்பது நாட்டிற்கு நல்லதல்ல. வாதப் பிரதி வாதங்களை வைத்துக் கொண்டு நாட்டிலே மேலும் இந்த பிரச்சினையை பெரிதாக்க வாய்ப்புக் கொடுத்துவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் சொன்னது போன்று, * என்று சொன்னதையும், அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதையும், அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் கிளர்ச்சி குறித்து சட்ட நுணுக்கங்களைப் பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது என்பதிலும், நடைமுறையிலே எழுந்துள்ள சிக்கலைத் தவிர்ப்பதற்கு அவர்களுடைய சாதாரண கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டால் என்ன என்பதிலும் நான் என்னுடைய கருத்துக்களை அழுத்தமாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நான் இதிலே சட்ட நுணுக்கங்கள், சட்டப் பிரச்சினைகள் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. அவர்கள் வைத்தது சாதாரணக் கோரிக்கை, அதற்குப் பல முன்னாதாரங்கள் இருக்கின்றன. சஸ்பெண்ட் செய்யாமலும் விசாரணைகள் நடைபெற்றிருக்கின்றன. சஸ்பெண்ட் செய்தும் விசாரணைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

---

முதலமைச்சர் சொன்னார், போலீஸார்களுக்கு தங்களைப் காப்பாற்றிக் கொள்ள ஒரு சங்கம் ஏற்படுத்தலாமா என்ற எண்ணம் வந்திருக்கிறது என்று. அவர்களுக்கு அந்த எண்ணம்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இப்போதல்ல ; தேனாம்பேட்டையிலே கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பிடிக்கப் போனபோது அவர்களைப் பிடித்து கட்டிவைத்து அடித்து கத்தியாலே குத்தியபோதுகூட அப்படிப்பட்ட எண்ணம் அவர்களுக்கு வந்தது. கிணத்துக்கடவு போலீஸ் லாக்கப்பிலே இருந்து குற்றவாளிகளை அங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர் அவர்களைப் பலாத்காரமாக விடுவித்துக் கொண்டு வந்தபோதுகூட அவர்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம் வந்தது. போலீஸ்காரர்கள் மாத்திரமல்ல, அரசு அலுவலர்கள், ஆளுங் கட்சிக்காரர்களால் தாக்கப்படுகிறார்கள் என்ற சூழ்நிலைகள் எல்லாம் கூட நாட்டிலே இன்றைக்கு ஏராளமாக இருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிடும்பொழுது ஆளுங்கட்சியால் அச்சுறுத்தப்படக்கூடிய நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த வகையில் ஆளுங்கட்சியால் பயமுறுத்தப்படுகிறார்கள் என்பது எப்பொழுதுமே சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டு. எல்லோரும் ஆதாரத்தோடு வந்திருக்கிறோம் என்று சொல்லத் தயாராக இருப்பார்கள். யாராவது ஏதாவது சொல்லிவிட்டால் அந்தக் கட்சியையே சொல்வது ஒரு மரபாகச் சில சமயங்களில் ஆக்கப்பட்டு விடுகிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு என்ன எண்ணம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. கிணத்துக்கடவைப்பற்றிச் சொன்னார்கள் அல்லது தேனாம்பேட்டையைப்பற்றிச் சொன்னார்கள் அல்லது குத்து வெட்டு, கட்டிப் பிடித்தார்கள் என்று சொன்னார்கள். அப்பொழுதிலிருந்தே அது இருக்கிறது என்பதைப் போலச் சொல்கிறார்கள். இதிலிருந்து அப்பொழுதிலிருந்தே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இதற்காக முயற்சி எடுத்ததாகத் தெரிகிறது. எப்படியோ, எனக்குத் தகவல் வந்தது இப்பொழுதுதான். துண்டுப் பிரசுரம் இருந்தது. அது ஆசையாக இருந்தால் இருக்கலாம், அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் பொதுவாக நாட்டுக்கு நல்லது அல்ல என்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் வேகமாக உள்ளே வந்தபொழுது நான் பேசிக் கொண்டிருந்த பிரச்னை இதைவிட வேகமான பிரச்சினை. திராவிட கழகத்தார் மறியலில் ஈடுபட்டு, அதன் பொதுச் செயலாளர் வீரமணி, இன்னும் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஆடவரும் பெண்டிருமாக இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொன்னேன். அவர்களுடைய மறியலுக்கான காரணத்தை விளக்கியிருக்கிறார்கள். அதையும் இங்கே குறிப்பிட்டேன். நாமெல்லாம் தந்தை பெரியார் என்று போற்றுகின்ற அந்தப் பகுத்தறிவுப் பகலவன், அவருடைய குடும்பத்தைப்பற்றித் தாறுமாறாக எழுதுகின்ற, எழுதிக் கொண்டிருக்கின்ற ஒருவர்

அரசவையினுடைய கவிஞராக இருக்கிறார். அதுமட்டுமல்லாமல், அரசாங்கம் நடத்துகின்ற பெரியார் விழாக்களுக்கு நான் வர மாட்டேன் என்று தெரியப்படுத்தி விட்டேன் என்று பகிரங்கமாகக் கூட்டங்களிலே பேசுகிறார். அவர் பெரியாரைப் பற்றிச் சொல்லிய இழிவான வார்த்தைகள், அவைகளை இங்கே நான் சொல்லி குறிப்பேட்டிலே பதிவு செய்து வைக்க விரும்ப வில்லை. அப்படிப்பட்ட ஒருவரை அரசவைக் கவிஞராக வைத்திருக்க வேண்டுமா என்ற கோரிக்கையை வைத்துத் திராவிடக் கழகத்தார் இன்றைக்கு மறியல் நடத்துகிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசவைக் கவிஞர் அல்ல, அரசுக் கவிஞர். அரசவைக் கவிஞர் அல்ல. தமிழக அரசுக் கவிஞர். அப்படித்தான் வைத்திருக்கிறோம். அவர் எழுதியது தவறு என்பதை எப்படிச் சுட்டிக் காட்ட வேண்டுமோ அப்படிச் சுட்டிக் காட்டி கருத்து வெளியிடப் பட்டிருக்கிறது. அதற்காக வருத்தமும் தெரிவித்திருக்கிறார்.

இதிலே உள்ள பிரச்னை என்னவென்றால், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதாக அவர் எழுதிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. போட்டா போட்டி போடுவதுபற்றி, ஆனால் அப்படித் துணிந்து விட்டால் நான் அதற்குப் பின்வாங்கப் போவதில்லை. ஆனால் ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அங்கே நடைபெறுகின்ற கருத்து வேறுபாடுகள் உண்மையா இல்லையா என்பதற்கு நான் தீர்ப்புச் சொல்லவில்லை, அதற்குத் தகுதி இல்லை, தெரியவும் தெரியாது. அப்படி நடந்ததா என்பது அவருக்குத்தான் தெரியும். இதை அவர்களுக்குள் பேசிக் கொண்டுதான் வெளியிட வேண்டும். ஒருவர் சொன்னதை அவர் மீண்டும் எழுதிக் கொண்டிருக்கிறார். அதற்கு எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை அவர்கள் எடுக்க வேண்டியதுதான் நியாயம். எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் இதற்காக வழக்கு தொடர்ந்தால்—அவர்மீது வழக்குத் தொடர்ந்தால் நிச்சயமாக நான் மகிழ்ச்சி கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர்கள்மீது வழக்குத் தொடர்வதாக இல்லை, நீதிமன்றத்திற்குச் செல்வ தாகவும் இல்லை. மக்கள் மன்றத்திற்குச் செல்வதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்களோடு சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மன்றத்திற்குச் செல்லத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மக்கள் மன்றத்திற்குச் செலவது அவர்களுடைய விருப்பம். மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதும், விளைவுகள் என்ன ஏற்படுகின்றன என்பதும் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிய வேண்டியது. ஆனால் அவர் சொல்வது, இன்னொருவர் என்னிடத்தில் சொன்னதாக அவர் எழுதுகிறார், அதைத்தான் அவர் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். தன்னுடைய பெயரை இழுத்து, இப்படிப்பட்ட புகார்கள் உண்மைக்குப் புறம்பாகச் சொல்லியிருக்கிறார் என்றால் நியாயமாக வழக்கைப் போடுவது முறையாக இருக்கும் என்பதற்காகச் சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அப்படித் தந்திரமாக யார் வேண்டுமானாலும் எழுதலாம். முதலமைச்சரைப் பற்றி யாராவது ஒருவர் மஞ்சள் பத்திரிகையிலே எழுதிவிடலாம். அதற்காக முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லி குற்றவாளியாக்கி விட முடியாது. ஆகவே, வேறு பத்திரிகையிலே இது வந்திருந்தால் நான் கவலைப்பட மாட்டேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது குறிப்பேட்டிலே எப்பொழுமே இருக்கும். மிகுந்த நன்றி. அதை நான் வரவேற்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : இப்படிச் சொல்கிற காரணத்தால் முதலமைச்சர்மீது குற்றங்களே சாட்டப்பட மாட்டாது என்று இதைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம்.

[பிற்பகல் 1·20]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, குற்றம் சாட்டுவதைப்பற்றி பயந்திருந்தேனானால், நான் இங்கே வந்து உட்கார்ந்திருக்க முடியாது. அதைப்பற்றி கவலை இல்லை. எவ்வளவு குற்றம் வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் சாட்டட்டும், அதைப்பற்றி கவலை இல்லை. யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் எழுத முடியும் மஞ்சள் பத்திரிகையில் என்று சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது. எல்லோருக்கும் அது ஒரு படிப்பினையாக இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : குற்றம் சாட்டுவதற்குப் பதிலைச் சொல்லாமல் இருந்து விட்டால், எவ்வளவு குற்றம் சாட்டினாலும் கவலைப்படாமல் இருந்து விடலாம், அது வேறு விவகாரம்.

இன்னொன்று, பெரியாருடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. காஞ்சீபுரத்தில் பெரியார் சிலையை வைப்பதற்காக திராவிடர் கழகம், அதற்கான இடத்தைக் கேட்டு,

1979 மார்ச் 22] (திரு. மு. கருணாநிதி)

அதற்குரிய பணத்தைக் கட்டி, பராமரிப்புச் செலவுக்கான பணம் உட்பட கட்டி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, பணம் கட்டப்பட்டு அனுமதி கேட்டு வழங்கப்பட்டது. ஆனால், இப்பொழுது அங்கே சிலை வைக்க அனுமதி அளிக்கப்படவில்லை. இந்த ஆட்சியால்....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒரு விளக்கம் தருவதற்கு நல்ல வாய்ப்பு தந்ததற்காக எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அவர்கள் கேட்டிருந்த இடம் மடம். கோயில் போன்ற மத நம்பிக்கைக்குரிய இடம். கோயில், மடம் போன்றவற்றிற்கு எதிராக இருப்பதால், அவற்றிற்கு இடைஞ்சலாக இருக்கிற இடத்தைக் கேட்கிற காரணத்தால், முன்னாலிருந்த குடியாட்சித் தலைவர் ஆட்சியிலே அதுபற்றி பரிசீலிக்கப்பட்டது. அது கூடாது முடியாது என்று மறுக்கப்பட்டது. நான் வந்தபிறகு அந்தப் புகாரைக் கவனித்து, யார் என்ன சொல்கிறார்கள் என்ற கருத்தையும் கேட்டபொழுது, பொதுவாக எனக்குச் சொல்லப்பட்ட யோசனை மட்டுமல்ல, ஒருமுறை காஞ்சீபுரத்தைப் பார்க்க போனபொழுது அந்த இடத்தைப் பார்த்துவிட்டு வந்தவுடனே உத்தரவு போட்டேன், எத்தனையோ மாதங்களுக்கு முன்பு—வேறு இடத்தில் வைக்க அவர்கள் கேட்பார்களானால், உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் உத்தரவு போட்டு பல மாதங்களாகி விட்டது.

திரு. மு. கருணாநிதி : சங்கராச்சாரியார் மடம் இருக்கிறது என்றால், அந்த மடத்திற்கு வெளியிலே பெரியாருடைய சிலை ஏன் இருக்கக் கூடாது என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நாட்டிலே அமைதி தேவை என்பதால். இந்த அரசு எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டும். நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கலாம். நம்பிக்கை இல்லாதவர்களாகவும் இருக்கலாம். ஒவ்வொருவருக்கும், மன நம்பிக்கையும் பாதுகாப்பும் அளிப்பது இந்த அரசின் கடமை. அங்கே சச்சரவுகள் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக, யாரோ அந்தச் சிலையை வைக்க வேண்டாம் என்று சொன்ன உத்தரவை மாற்றி, வேறு இடத்தில், எங்கு கேட்டாலும், வசதியான இடத்தில், மக்களுக்குப் பயன் படுகிற வகையில் ஒரு இடத்தை ஏற்பாடு செய்து கொடுங்கள் என்று நான் உத்தரவிட்டேன்.

திரு. மு. கருணாநிதி : ஒருவேளை, போக்குவரத்துக்கு இடைஞ்சலான இடம் என்பதால் அது அனுமதிக்கப்படவில்லை யென்று முதலமைச்சர் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். சங்கராச்சாரியாருக்காகத் தான் அந்த இடம் கொடுக்கப்பட வில்லை என்று சொல்லத்தான்..............

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சங்கராச்சாரியாருக்காகத்தான் கொடுக்கப்படவில்லையென்றால் அதைத் துணிவோடு சொல்லிறவன் நான். ஏனென்றால், நான் அவரைப் போய் நேரிலே கண்டு, அவர் என்ன சொல்கிறார் என்பதை நேரிலே பேசி, கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டவன். அந்த அளவு துறவியாக, உண்மையிலே துறவிக்கு அடையாளமாக வாழ்கிறார் என்பதை இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அவருக்காகவோ, அந்த மடத்திற்காகவோ அல்லது இட நெருக்கடிக்கோ என்று பிரித்துப் பார்ப்பதற்கில்லாமல், இட நெருக்கடியும் இருக்கிறது. அதோடு, வேறு அரசியல் நெருக்கடி, மத நெருக்கடி, மற்றும் சச்சரவுகள், குழப்பங்கள் வரலாம். அதெல்லாம் வரக்கூடாது என்பதற்காக இந்த நிலையை நான் மேற்கொண்டேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தியாகராய நகரிலே கூட, கழக ஆட்சியிலே ஒரு கோயிலுக்கு எதிரிலே பெரியார் சிலையை வைக்க திராவிடர் கழகத்திலே அனுமதி கேட்ட பொழுது, கோயிலுக்கு எதிரிலே பெரியார் சிலையை வைக்கலாமா அது தகுமா என்று பத்திரிகைகள் எல்லாம் எழுதின. அந்த மடத்திற்குச் சொந்தக்காரர்கள் எல்லாம் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதே இடத்திலே அனுமதி தரப்பட்டு, பெரியார் சிலையும் வைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியார் சிலை வைக்கின்ற காரணத்தால் பெரிய மதப் புரட்சி மதப் போராட்டம் எல்லாம் வந்துவிடும் என்பதை என்னைப் பொறுத்தவரையில் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, நான் ஏற்கனவே அறிவித்திருக்கிறேன், ஒரு மாதத்திற்குள் குறிப்பிட்ட இடத்தில் திராவிடக் கழகத்தார் கேட்டுள்ள இடத்தில் பெரியாருடைய சிலையை வைக்க அனுமதி மறுக்கப்படுமானால் அந்தத் தடையை மீறி, நானே தலைமையேற்று அந்த இடத்தில் பெரியார் சிலையை வைக்க முயற்சி எடுப்பேன் என்று தெரிவித்துள்ளேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் என்கிற நிலையிலே இங்கேயே பதில் சொல்லிவிடுகிறேன், எந்தக் காரணத்தைக் கொண்டும் அங்கே சிலை வைக்க இந்த அரசாங்கம் அனுமதிக்காது.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எப்படியும் அந்த இடத்திலே பெரியார் சிலையை தி.மு.கழகம் வைத்தே தீரும்.

(முறியடிப்போம், முறியடிப்போம் என்ற குரல்கள் எழுந்தன) (கூச்சல் குழப்பம்).

திரு. துரை முருகன் : பெரியார் சிலையை உடைப்போம் என்றா சொல்கிறீர்கள்?........

திரு. மு. கருணாநிதி : பரவாயில்லை, சங்கராச்சாரியார் அவர்களுக்காக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரியார் சிலையை உடைப்போம் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சங்கராச்சாரியார் அவர்களுக்காக இந்த அரசு பேசவில்லை, சிலையை உடைப்போம் என்றும் சொல்லவில்லை. பொது அமைதியைக் கருதி.........

திரு. துரை முருகன் : சங்கராச்சாரியாருக்காக பெரியார் சிலையை உடைப்போம் என்று சொல்கிறார்களே, இந்த ஆட்சி, இந்த எம்.எல்.ஏ. பதவி எல்லாம் வந்ததே பெரியாரால்தானே. பெரியார் சிலையை.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள் துரை முருகன். எல்லா உறுப்பினர்களுமே தயவு செய்து அமர வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள் — முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : சார், உங்களுக்கும் சேர்த்துதான் நான் சொல்கிறேன். பெரியார் சிலையை உடைப்போம் என்று இவர்கள் சொல்கிறார்களே.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெரியார் சிலையை உடைப்பதாக யாரும் இங்கே சொல்லவில்லை. பொது அமைதியைக் காப்பதற்காக, பின்னால் ஏற்படும் விளைவுகளை யோசித்து.........

திரு. துரை முருகன் : பெரியாருக்காக நாங்கள் எதையும் செய்யத் தயாராக இருக்கிறோம். உயிரையும் கொடுக்கத் தயார். சுடப்போகிறீர்களா, வேண்டுமானால் சுடுங்கள், பெரியார் சிலையை உடைக்கப்போவதாக சொன்னால் அதைக் கேட்டுக் கொண்டு.......

[திரு. மு. கருணாநிதி] [1979 மார்ச் 22

வழக்கறிஞர்கள் கிளர்ச்சியில் அவர்கள் வைத்துள்ள சாதாரண கோரிக்கை ஒரு துணை நடிகையைக் கைது செய்த ஒரு போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்தீர்களே, ஒரு வழக்கறிஞரை அடித்த போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்யக்கூடாதா என்று உருக்கமாகக் கேட்கின்ற அந்தக் கோரிக்கையைக் கூடக் கேட்காமல் பிடிவாதத்தோடும் அதே நேரத்தில் நீதி விசாரணைக்கும் தயாரில்லை என்கின்ற அந்த பிடிவாதத் தோடும் அரசு நடந்துகொண்டு சட்டம், ஒழுங்கு, அமைதி தமிழகத்திலே கெடுவதற்கான சூழ்நிலையை இந்த அரசு இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் நான் இங்கே சாட்ட விரும்புகிறேன்.

இன்று கூட திராவிட கழகத் தோழர்கள் ஏறத்தாழ மூவா யிரத்துக்கு மேற்பட்டவர்கள் கோட்டையை நோக்கி ஊர்வலமாக வந்து மறியலில் ஈடுபட்டு திராவிடர் கழகப் பொதுச் செய லாளர் திரு. வீரமணியும் மற்றும் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களும் ஆடவரும் பெண்டிரும் இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏன் அந்த மறியலில் ஈடுபட்டார்கள் என்பது முதலமைச்சருக்குத் தெரியும். அவையில் உள்ள பெரியார் மீதும் அண்ணா மீதும் பெரியாருடைய அருமைத் துணைவியார் நாகம்மையார் மீதும் அன்பும் பாசமும் கொண்ட அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

அரசுக்கு கவிஞராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றவர். இந்த அரசவைக் கவிஞர்....

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏதோ ஒரு சம்பவம் பற்றி சொல்லப்பட்டது. துணை நடிகை ஒருவரைக் கைது செய்ததற்காக ஒரு அதிகாரியை சஸ்பெண்ட் செய்ய முடியும் என்றால் வக்கீலை அடித்ததற்காக ஏன் ஒரு அதிகாரியை தற்காலிக வேலை நீக்கம் செய்யக்கூடாது என்று வழக்கறிஞர் கள் கேட்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஒன்றை பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தனை மணி நேரத்திற்குப் பிறகு பெண் களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதை மீறுகின்ற வகை யில் யாராவது நடந்தால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள் என்பதற்காக இந்த மாமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு ஆத்திரப்பட்டார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அந்த நிலையில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒருவருக் கொருவர் அடித்துக் கொண்டார்கள் என்று இருவரும்

1979 மார்ச் 22]

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பெரியார் சிலை பற்றிய விவகாரம் முடிந்து விட்டது என்றே கருதுகிறேன். சிலையை வைக்க அனுமதிக்க முடியாது அவர்கள் ஆட்சி இருக்கிற வரையில் என்று கூறிவிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் அந்தச் சிலையை அங்கே வைத்தே தீருவது என்ற முடிவை எங்கள் கட்சியின் சார்பாக அறிவிக்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். அவர்கள் பேசி முடித்த பிறகு பேசலாம். ஏதாவது எடுத்துச் சொல்வதாக இருந்தாலும் அவர்கள் பேசிய பிறகு பேசலாம். உட்காருங்கள்.

[பிற்பகல் 1—30].

திரு. சோ. பாலகிருஷ்ணன் : இந்த அவையில் ஆத்திகர்களே கிடையாதா, திரு. கந்தசாமி பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இதற்கிடையில், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சத்தியா ஸ்டுடியோஸ் பற்றி ஒரு குறிப்பைச் சொன்னார்கள். இப்போது எனக்கு செய்தி வந்து இருக்கிறது. அதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். சத்தியா ஸ்டுடியோஸ் நிர்வாகிகள் சார்பில் ஆர்பிட்ரேஷனில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் ஒரு தவறான செய்தியை, உண்மைக்குப் புறம்பாகச் சொல்கிறார்கள். 1—3—79—ம் தேதி ஆர்பிட்ரேஷன் போட்டு இருப்பதாக கவர்ன்மென்ட் ப்ளீடர், சத்தியா ஸ்டுடியோஸ் வழக்கறிஞர் என். சி. ராகவாச்சாரி ஆகியோருக்கு கலெக்டர் கடிதம் எழுதி இருக்கிறார். 1—3—79 வியாழக் கிழமையாக இருப்பதால், உயர்நீதி மன்றம் இருக்கிறது. எனவே ஏதாவது சனிக்கிழமை போட்டால் கலந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று கவர்ன்மென்ட் ப்ளீடர் 28—2—79 அன்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரும் 31-ம் தேதி சனிக்கிழமை ஆர்பிட்ரேஷன் போட்டு கடிதம் அனுப்பி இருக்கிறார் என்ற செய்தி சத்தியா ஸ்டுடியோஸ் சார்பில் வழக்கறிஞர் என். சி. ராகவாச்சாரி தந்து இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் 1—30 ஆகிவிட்டது. இன்னும் எவ்வளவு நேரத்தில் முடித்துக்கொள்வீர்கள் என்று தெரிந்தால் அவையை நீட்டிக்க உதவிகரமாக இருக்கும்.